விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 008 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 11 புதன்கிழமை (27.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### ஆழிப்பேரலையில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி



3ஆம் பக்கம் பார்க்க

## நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரிப்பு

### நாளாந்தம் சுமார் 335 தொற்றாளர்கள் பதிவு

(கொழும்பு)

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது.

நாளாந்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 335ஐ கடந்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 25 தினங்களில் 8,728 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் அந்தப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 85,216 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான நோயாளர்கள் அடையாளம் 15

## தையிட்டியில் விகாரையை அகற்ற வலியுறுத்தி

### 2ஆவது நாளாகவும் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் தமிழர்களின் காணிகளை அபகரித்து சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள விகாரையினை அகற்றுமாறு கோரி இரண் 15

## தரமற்ற மருந்து நாட்டுக்கு இறக்குமதி

### கெஹலியவிடம் சி.ஐ.டி விசாரணை

(கொழும்பு)

இலங்கைக்கு தரமற்ற நுண்ணுயிர் எதிர்ப்பிகளை இறக்குமதி செய்தமை தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் இல்லத்திற்குச் சென்று நேற்றுப் பிற்பகல் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தது. 15

# வடக்குக் காணிகள் விடுவிக்கப்படும்

### ஜனாதிபதி யாழ்.வரும்போது சாத்தியப்படும் – அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

ஜனவரி மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் விஜயம் செய்யும்போது வடக்குக் காணிகள் விடுவிக்கப்படும் அல்லது காணி விடுவிப்புத் தொடர்பில் பச்சைக் கொடி காட்டப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### அந்தமானில் காற்று சுழற்சி

## வடக்கு - கிழக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

அந்தமான் கடலில் காற்றுச் சுழற்சி காரணமாக வடக்குக் கிழக்கில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடல் பிராந்தியம் மற்றும் தென் அந்தமான் கடல் பிராந்தியத்தில் ஒரு காற்று சுழற்சியும் வட அந்தமான் 15

## களுத்துறையில் சிறைக் கைதி

### அடித்துக் கொலை

(களுத்துறை)

களுத்துறை சிறைச்சாலையில் கைதி ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைதி கடும் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனு 15

## ஜனாதிபதித் தேர்தலில் ரணிலால் வெற்றி பெற முடியாது

### விக்னேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவால் வெற்றி பெற முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். 15

### மார்கழி இசை விழா 2023

காலம்
இன்று புதன்கிழமை
மாலை 4.45

இடம்
யாழ்.கலாசார மத்திய நிலையம்

6ஆம் பக்கம் பார்க்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு – கிழக்கு பிரதேசங்களை சிங்களவரிடமிருந்து பறிக்க சதியாம்

## இனவாதத்தை கக்கிய சரத் வீரசேகர



(கொழும்பு)

நாட்டின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களை சிங்கள மக்களிடமிருந்து பறிக்கும் சதிச் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

அகில இலங்கை பௌத்த பேரவையின் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுமார் இருபத்தைந்தாயிரம் சிங்களக் குடும்பங்கள் வாழ்ந்ததாகவும், இன்று அந்த மாகாணங்களில் ஒரு குடும்பம் கூட இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐம்பத்திரண்டு வீதமான தமிழ் மக்களில் வடக்கு, கிழக்கில் வாழ்கின்றனர் எனத் தெரிவித்த அவர், சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக இருந்தும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உரிமைகளை இழந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அந்த மாகாணங்களில் மூன்று மாவட்டங்களில் சிங்களப்பாடசாலைகள் இல்லை எனவும், இது ஒரு துரதிஷ்டமான நிலை என தெரிவித்த அவர், இந்த நிலைமையை எதிர்கொள்ள சிங்கள பௌத்த மக்கள் ஒன்றிணைய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)

## சிறைச்சாலைகளில் சுகாதாரவசதிகள் மிகவும் மோசமான தரத்தில்

### அம்பிகா சற்குணநாதன் விசனம்



(கொழும்பு)

சிறைச்சாலைகளின் சுகாதார வசதிகள் மிகவும் மோசமான தரத்தில் இருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் விசனம் வெளியிட்டுள்ளார்.

மாத்தறை சிறைச்சாலையில் மூளைக்காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்ட 8 கைதிகள் ஏற்கனவே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த சனிக்கிழமை இரவு மேலும் 8 கைதிகள் மத்தியில் மூளைக்காய்ச்சல் அறிகுறிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அம்பிகா சற்குணநாதன், சிறைச்சாலைகளின் சுகாதார வசதிகள் மிகவும் மோசமான தரத்திலேயே இருப்பதாகவும், எனவே ஏதேனும் நோய்த் தொற்றுப்பரவல் ஏற்படும்போது கைதிகள் பெரும் ஆபத்துக்கு உள்ளாவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி பெரும் எண்ணிக்கையான கைதுகள் மற்றும் தடுத்து வைப்புக்களின் ஊடாக சிறைச்சாலைகளில் சாதாரணமாகத் தடுத்து வைக்கப்படக் கூடிய கைதிகளின் எண்ணிக்கைக்கு அப்பால்சென்று இடநெருக்கடி ஏற்படுத்தப்படுவதாகவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

அத்தோடு கொரோனா தொற்றுப்பரவல் ஏற்பட்ட காலப்பகுதியில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளின் சுகாதார நலன்கள் உரியவாறு பேணப்படாமை மற்றும் அங்கு நிலவும் குறைபாடுகள் என்பன பற்றியும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## சவுதியில் வடமராட்சியை சேர்ந்த குடும்பஸ்தர் பலி

- ◆ வேலைக்கு சென்ற நிலையில் விபரீதம்
- ◆ உயிரிழப்பில் உறவினர்கள் சந்தேகம்



(கரணவாய்)

வடமராட்சியை சேர்ந்த இளம் குடும்பஸ்தர்ஒருவர்சவுதிஅரேபியாவிற்கு வேலைவாய்ப்புக்காக சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

அவரின் உயிரிழப்பில் உறவினர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளதுடன் அவர் உயிரிழந்திருந்தால் சவுதி அரேபிய தூதரகம் மூலம் உறுதிப்படுத்துமாறும் அவ்வாறு அவர் உயிரிழந்திருந்தால் உடலத்தை இலங்கைக்கு அனுப்புமாறும்உறவினர்கள்உருக்கமான கோரிக்கையை விடுத்துள்ளார்.

வீரவோடை, அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான விபுலகுமார் துவிகரன் (வயது-25) என்பவர் இம்மாதம் இரண்டாம் திகதி சவுதி அரேபியாவுக்கு வேலை வாய்ப்பிற்காக சென்றுள்ளார்.

அவ்வாறு சென்றவரின்தொலைபேசி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன் காரணமாக உறவினர்கள் பலருடன் தொடர்பு கொண்ட நிலையில் அவர் விபத்தில் சிக்கி ஆபத்தாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அவர் கடந்த 14 ஆம் திகதி உயிரிழந்துவிட்டதாக வெளிநபர்கள் மூலம் உறவினர்கள் அறிந்துள்ளனர். எனவே அவர் உயிரிழந்திருந்தால் மரணத்தில் தமக்கு சந்தேகம் இருப்பதாகவும் உயிரிழந்தமை தொடர்பில் சவுதி தூதரகம் தெளிவுபடுத்துமாறும் இது தொடர்பில் இலங்கை அரசாங்கமும் இலங்கை வெளிவிவகார அமைச்சும் கரிசனை செலுத்தி இதன் உண்மைத்தன்மையை வெளிப்படுத்துமாறும் அவர் உயிரிழந்திருந்தால் உடலத்தை இலங்கைக்கு கொண்டுவர ஏற்பாடு செய்யுமாறும் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7,60)


தைப் பொங்கல் பெருவிழா



நீச்சல் போட்டி

இடம் : லக்ஷ் நீச்சல் பயிற்சித் தடாகம்
செட்டித் தெரு, நல்லூர்
காலம் : 2024.01.10 முதல் 2024.01.20 வரை
போட்டியில் : சிறுவர் முதல் பெரியவர் வரை ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றலாம்
மதிப்பீட்டில்: சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும்



முற்பதிவு செய்து கொள்ளவும்

077 291 2809, 075 572 0966

(18376)



கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி **சுதாஜினி கிசோக்குமார்** அவர்களின்
அன்புத் தந்தை

அமரர்
**சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை**



அவர்கள் அமரத்துவம் அடைந்தமையையிட்டு
ஆசிரியைக்கும் அவரது குடும்பத்தினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் : 19.07.1942
மறைவு : 24.12.2023

பிரிவுத்துயருடன்...
சேவையாளர் சங்கம்

(18383)



ஆண்டு பதினெட்டில் நினைவு கூருகின்றோம்



தோற்றம் 17.07.1927
மறைவு 16.12.2005

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

அமரர்
**கணபதிப்பிள்ளை கணேசன்**

திதி : அபரபக்க பிரதமை
(27.12.2023)
என்றும் உங்கள் புனித ஆத்மா
எங்களை ஆசீர்வதிக்க
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

துன்னாலை மத்தி,

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலையில் உயிரிழந்த உறவுகளுக்கு உணர்வு பூர்வ அஞ்சலி நிகழ்வுகள்



முல்லைத்தீவு


உடுத்துறை


மன்னார்


விடுவமடு


வவுனியா


யாழ்.பல்கலை

சுனாமி பேரழிவு ஏற்பட்டு 19 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் நேற்று பல்வேறு பகுதிகளிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.
(படங்கள்: சிவசாந்தன், மகாலிங்கம், சதீஸ், வசந்தரூபன், தேவானந்தன்)

## 'என்ன நடந்தது' என்று தேடிய ஆணைக்குழுக்கள் 'யார் செய்தது' என கண்டறியவில்லை

### சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் சுட்டிக்காட்டு

(ஜெனிவா)

**இலங்கையில் கடந்தகாலங்களில் நியமிக்கப்பட்ட அனைத்து ஜனாதிபதி ஆணைக்குழுக்களும் "என்ன நேர்ந்தது" என்பதைக் கண்டறிவதற்காக உருவாக்கப் பட்டனவே தவிர, "யார் அதனைச் செய்தது" என்பதைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என சுட்டிக்காட்டியிருக்கும் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம், எனவே தற்போதைய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் அதனை ஒத்த நடவடிக்கையா எனக் கேள்வி எழுப்பி உள்ளது.**

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் முன்னெடுத்துவரும் முயற்சிகள் பாதிக்கப்பட்டோர் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினரதும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில், இது குறித்து யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் மேலும் கூறியிருப்பதாவது.

இலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி) அட்டூழியங்கள் இடம்பெற்ற 1989 ஜூலைமாத காலப்பகுதியில் கம்பஹா மாவட்டத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட சார்ஜன்ட் ரத்நாயக்க இன்னமும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை.

ஏனெனில் இலங்கையில் நியமிக்கப்பட்ட அனைத்து ஜனாதிபதி ஆணைக்குழுக்களும் என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிவதற்காக உருவாக்கப்பட்டனவே தவிர, யார் அதனைச் செய்தது என்று கண்டறிவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

எது எவ்வாறெனினும் வலிந்து காணாமலாக்கப்படல்களுடன் தொடர்புடைய கடத்தல்காரர்களை அடையாளங்காண முடியும். ஆனால் 1989 ஒக்டோபர் மாதத்திலிருந்து அது பற்றி எவரேனும் விசாரணை களை மேற்கொண்டனரா? குறிப் பாக 1989 இல் காணாமல் போன நபரொருவர் பற்றிய தகவல்களில், அவர் தமது காவலின்கீழ் இருந்ததாக இராணுவத்தினர் (தலத்துஓயா இராணுவ முகாம்) கூறுகின்றனர்.

அவ்வாறெனில், அந்நபரை எவ்வித சாட்சியங்களுமின்றி காணாமலாக்கியது யார்? அக்காலப்பகுதியில் தலத்து ஓயா இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியாக செயற்பட்டவர்யார்? அதனைக் கண்டறிவது அத்தனை கடினமானதல்ல.

அதேபோன்று பிறிதொரு காணாமலாக்கப்படல் சம்பவம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டில், 1990 ஆம் ஆண்டு பேராதனையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவரைக் கைதுசெய்த (பின்னர் காணவில்லை) இராணுவத்துக்குச் சொந்தமான வாகனத்தின் பதிவிலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுகுறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் 2009 மே மாதம் 18 ஆம் திகதி தம்மிடம் சரணடைந்து காணாமல்போன நூற்றுக்கணக்கான தமிழர்களை பேருந்து பதிவிலக்கமின்றி (அவர்களை அழைத்துச்சென்ற) கண்டறியமுடியாது என இராணுவம் கூறியது.

அதுமாத்திரமன்றி 1989 ஆம் ஆண்டு இராணுவத்தைச் சேர்ந்த சீருடையணியாத சுமார் 30 - 40 பேரால் அழைத்துச்செல்லப்பட்ட தனது 20 வயது மகன் காணாமல் போனமை குறித்து முறைப்பாடளிப்பதற்கு கலகெதர பொலிஸார் அனுமதியளிக்கவில்லை என தாயொருவர் தெரிவித்துள்ளார் என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.(நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ஐ.பி.எல் தொடரில் ஹர்திக் விலகல்? மீண்டும் கப்டன் ஆவாரா ரோகித்சர்மா?


கணுக்காலில் ஏற்பட்ட காயம் முழுமையாக குணமடையாத நிலையில் ஹர்த்திக் வரும் ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனால் மும்பை இந்தியன்ஸ் கப்டனாக மீண்டும் ரோகித் செயற்பட அதிக வாய்ப்புள்ளதாகவும் தகவல் வந்துள்ளது.


ஐ.பி.எல் போட்டிக்கான வீரர்கள் ஏலத்துக்கு முன்பு தங்களது வீரர்களை பரிமாற்றம் செய்து கொள்ள, வீரர்களை தங்களது அணியில் தக்க வைத்துக் கொள்ளவும் விடுவிக்கவும் முடியும்.

அதன்படி ஹர்திக் பாண்ட்யாவை மும்பை இந்தியன்ஸ் அணி விலைக்கு வாங்கியது. அதனை தொடர்ந்து மும்பை இந்தியன்ஸ் அணியின் கப்டனாக இருந்த ரோகித்சர்மாவை நீக்கிவிட்டு ஹர்திக் பாண்ட்யாவை புதிய கப்படனாக மும்பை அணி நிர்வாகம் அறிவித்திருந்த நிலையில் ஹர்த்திக் உபாதையால் விலகியதாக தகவல் வெளியாகியுள்ளது.

மும்பை நிர்வாகம் குழப்பத்தில் உள்ளது. இந்நிலையில் மீண்டும் மும்பை அணி நிர்வாகம் ரோகித்தை நாடுமா என ரசிகர்கள் ஆவலாக உள்ளனர்.

இதுவரை நடைபெற்ற ஐ.பி.எல். தொடர்களில் விளையாடிய மும்பை இந்தியன்ஸ் அணி இதுவரை ஐந்து முறை கோப்பையை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)






# தொடரை வென்ற இந்திய மகளிர்

அவுஸ்திரேலியா மகளிர் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 1 டெஸ்ட், 3 ஒருநாள், 3 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடின. இதில் முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய மகளிர் 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது.

டாஸ் வென்று முதலில் பட் செய்த அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 219 ரன்கள் எடுத்து ஓல் அவுட்டானது. தஹிலா மெக்ரத் அரை சதம் அடித்தார்.

இந்தியா சார்பில் பூஜா வஸ்த்ராகர் 4, ஸ்நேரானா 3 மற்றும், தீப்தி ஷர்மா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆடிய இந்தியா முதல் இன்னிங்சில் 406 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. 4 வீராங்கனைகள் அரை சதம் கடந்தனர்.

இதையடுத்து, 187 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸ் ஆடிய அவுஸ்திரேலியா 261 ரன்களில் ஓல் அவுட்டானது. தஹிலா மெக்ராத் 73 ரன்கள் எடுத்தார்.

இந்தியா சார்பில் ஸ்நேரானா 4 விக்கெட்டும், ஹர்மன்பிரீத் கவுர், கெய்க்வாட் ஆகியோர் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

75 ரன்களை இலக்காகக் கொண்டு ஆடிய இந்தியா 2 விக்கெட் இழப்புக்கு ரன்களை எடுத்து வெற்றி பெற்று டெஸ்ட் தொடரையும் கைப்பற்றியது.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக இந்தியா பெற்ற முதல் வெற்றி இது என்பது குறிப்பிடத்தக்கது. (5-6-)




# இங்கிலாந்து அணிக்கு பயிற்சியாளராக பொல்லர்ட்




இங்கிலாந்து இருபது -20 அணிக்கு ஆலோசகர் பயிற்சியாளராக வெஸ்ட் இண்டீஸ் அணி வீரர் பொல்லர்ட் நியமிக்கப்பட்டுள்ளார். இருப்பினும், இது குறித்து இங்கிலாந்து கிரிக்கெட் வாரியமோ அல்லது போல்லர்ட் தரப்பில் அதிகாரபூர்வ தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

பொல்லர்ட் வெஸ்ட் இண்டீஸ் அணி 2 முறை இருபது -20 உலக கோப்பையை கைப்பற்றியது. இவர் இருபது 20 கிரிக்கெட்டின் ஜாம்பவான் என்று கருதப்படுகிறார் என்பதில் சந்தேகமில்லை. வீரராக கலக்கி வந்த இவர் பயிற்சியிலும் தற்போது கலக்கி வருகிறார். ஐ.பி.எல் இல்மும்பை இந்தியன்ஸ் அணிக்கு பட்டிங் பயிற்சியாளராக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயாற்று வழியில் பேருந்து மோதி எட்டு மாடுகள் உயிரிழப்பு



(மன்னார் )

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி நாயாத்துவழி பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் 8 மாடுகள்உயிரிழந்துள்ளன.

யாழில் இருந்து மன்னார் நோக்கி பயணிகளுடன் அதி வேகமாக பயணித்த தனியார் பேருந்து ஒன்று நாயாத்து வழி பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த மாடுகளின் மீது மோதியுள்ளது. குறித்த விபத்தில் கூட்டமாக சென்ற மாடுகளில் 8 மாடுகள் சம்பவ இடத் திலேயே உயிரிழந்ததோடு பல மாடுகள் பலத்தகாயங்களுக்கு உள்ளா கியுள்ளன. சம் பவ இடத்திற்கு வருகை தந்த அடம்பன் பொலிஸார்மேல திக விசாரணை களை முன் னெடுத்து வருகின்ற னர் (நி-6-285)

# வீடொன்றில் பதுக்கி வைத்திருந்த 30 கசிப்பு போத்தல்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வீடொன்றில் அலுமாரிக்குள் பதுக்கி வைக்கப் பட்டிருந்த 30 கசிப்பு போத்தல் களை பொலிஸார் மீட்டுள்ளனர். சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன் றில் கசிப்பு விற்பனை இடம்பெறு வதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்ப டையில், குறித்த வீட்டிற்கு விரை ந்த பொலிஸார் வீட்டினை முற்று கையிட்டு . தேடுதல் நடத்தினர்.

அதன்போது வீட்டினுள் இரு ந்த அலுமாரி ஒன்றினுள் இருந்து 30 போத்தல் கசிப்பினை மீட்டுள் ளனர். அதனை அடுத்து வீட்டில் இருந்த பெண்ணை கைது செய்த பொலிஸார் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடு த்து வருகின்றனர். (நி-6-33)







# இராசிபலன்

27.12.2023
மார்கழி 11, புதன்கிழமை
பிரதமை முழுவதும்
திருவாதிரை பின்னிரவு 12.03 மணிவரை

சுபநேரம்-4.57-6.27 மணிவரை
இராகுகாலம்-12.27-1.57 மணிவரை
உதயம் நடேசர் ஆகுத்திரா தரிசனம்

சந்திராஷ்டமம்
விசாகம், அனுசம்

**வளவன்**

**மேஷம்** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** பொது வாழ்வில் புகழ் கூடும், அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் கூடும், நிதிநிலை உயரும் நாள்.

**மிதுனம்** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**கடகம்** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**சிம்மம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**கன்னி** அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வரலாம், கனவு பலிதமுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**துலாம்** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**விருச்சிகம்** வரவைக் காட்டிலும் விரயங்கள் மேலோங்கும் நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வழிபாடு குதூகலம் தரும்.

**தனுசு** குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** உற்சாகத்தோடு பணி புரியும் நாள், உடல் நலன் சீராகும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மீனம்** தொழில் ரீதியாக வர வேண்டிய பணவரவு கிடைக்கும் வாய்ப்புண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன வருமானவரி பத்திர விநியோகத்தில் புதிய நடைமுறை

## மோ.போக்குவரத்து திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

2024 ஆம் ஆண்டு முதல் புதிய இளமஞ்சள் நிறத்திலான வாகன வருமானவரிப் பத்திரங்கள் நடைமுறைக்கு வரவுள்ளது என வடமாகாண போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வருடத்திற்குரிய மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகன வருமானவரிப் பத்திர விநியோக நடை முறையானது டிசெம்பர் 29 ஆம் திகதியுடன் நிறைவு பெறுகின்றது. 2024 ஜனவரி 1 ஆம் திகதி மீண்டும்பணிகள் ஆரம்பமாகும்.

எந்தவொரு வாகனத்திற்கும் வாகன வருமானவரி முடிவடைந்த மறுதினத்திலிருந்தே தண்டப்பணம் அறவிடப்படும்.

மேலும் நடைமுறையில் உள்ள வாகன வருமானவரிப் பத்திரம் முடிவடைவதற்கு முதல் இரண்டு மாத காலப் பகுதியினுள்ளேயே புதுப்பித்துக்கொள்ள முடியும் என வட மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் திருமதி. சி.சுஜீவா அறிவித்துள்ளார். (நி-6)

# உருளைக்கிழங்கு பயிரிடுவதற்கான 50 வீத மானியத்தை பெற்றுத்தாருங்கள்

## அமைச்சர் டக்ளஸிடம் மாவட்ட கமக்கார அமைப்பு கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடக்கில் அடுத்த பருவ காலத்தில் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையை சுமார் 150 ஹக்ரேயரில் மேற்கொள்வதற்கு 50 வீத மானியத்தினை பெற்றுத் தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த வருடம் நவீன மயப்படுத்தப்பட்ட மேம்பாட்டு திட்டத்தின் கீழ், வடக்கு விவசாயிகளுக்காக எடுத்துவரப்பட்ட சுமார் 21000 கிலோ உருளைக் கிழங்கு பயன்படுத்த முடியாத நிலையில் அது தொடர்பாகவும் இச் சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் குறித்த விடயம் தொடர்பாக அறிக்கை கோரியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், எதிர் காலத்தில் இவ்வாறான விடயங்கள் நடைபெறாது எனவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் விவசாயிகள் எதிர் கொள்ளும் பல்வேறு விடயங்கள் தொடர பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# செவனகல லேகியம் விற்பனை; ஆயுர்வேத வர்த்தகர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிநகர்பகுதியில்உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் செவன கல லேகியம் என்ற போதையை ஏற்படுத்தக் கூடிய பொருளை விற்பனைக்காக வைத்திருந்த ஆயுர்வேத வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் நேற்று காலை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 3 கிலோ 720 கிராம் எடை கொண்ட எட்டு லேகிய பைக்கற்றுக்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரிப் பொலிஸாரால் போதைப்பொருள் பாவனையாளர் என அடையாளம் காணப்பட்ட இளைஞன் ஒருவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய நிலையில் மேற்படி இளைஞன் தொடர்ச்சியாக குறித்த லேகியத்தை பாவித்ததாக வழங்கிய தகவலின் அடைப்படையிலேயே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.(நி-6-30)


55 49 ஆவது ஜனன நினைவு தினம்

அமரர்.தங்கராசா திருஞானசோதி



(1968-1974)

அசுரவேகமாக காரில் வந்த "சின்னனின் மைந்தனாம்" (காலன்)
உன்னைக் கவர்ந்து சென்று, ஜோதிடரின் கணிப்பை (விதி) நிஜமாக்கி,
அசுரவேக கார்ச்சில்லினுள் (விபத்தில்) மகனைப் பறிகொடுத்த தாய்,
ஈர உடையுடன் மந்திகை மருத்துவமனை நோக்கி ஓடி அங்கு
தரையில் வீழ்ந்து உழன்ற ஏகபுத்திரியாம் உத்தமியான அன்னை சாந்தா.

விபத்தில் "தவறை ஏற்க மறுத்து" "மறைத்து" சாரதியை மாற்றி யே அன்று
நீதிமன்றில் வாதாடிய "சிதம்பரத்தாரும்" மாடிவீட்டு "சின்னனும் மைந்தனும்" இவற்றை
நினைவூட்டி அறிய வைத்த கோட்டுவாசல் சண்டிகா பரமேஸ்வரி!
கண்கண்ட சாட்சியையே கூறித் தெரியவைத்த குளவியடி கண்ணகா பரமேஸ்வரி!
உண்மைகள் என்றுமே உறங்குவதில்லை காளி-முத்துமாரி அம்மா!

மகனைப் பறிகொடுத்த "மானத்தி" யான தாயும் இங்கே.
மகன் விட்ட (விடும்) தவறை மறைத்த (மறைக்கும்) தாயும் இங்கே.

(18379)

செல்வவாசா – சாந்த இல்லம்
210/1 யாழ்வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

50ஆவது ஆண்டை நோக்கிய
உன் நினைவுடன்
[illegible]


## சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வட கிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக் கிழமை மாலை 3.00 மணிக்கு மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திரு வீதிவலம் வரும் காட்சி இடம் பெறும்என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி-6)

# மார்கழி இசைவிழா 2023

**காலம்: 27 புதன்கிழமை**
**நேரம்: மாலை 4.45**
**இடம்: யாழ்.கலாசார மத்திய நிலையம்**

### முதலாம் நாள் நிகழ்வுகள்

5.00pm-5.05pm
மங்கல விளக்கேற்றல்

5.05pm-5.15pm
தமிழ்த்தாய் வாழ்த்து
இசைப்பிரிவு மாணவர்கள், இந்தியா கோர்னர்,
நெறியாள்கை திருமதி-வாசஸ்பதி ரஜீந்திரன்

5.15pm-5.20pm
திருநிறை வழங்கல்
இந்தியத்துணைத்தூதரகம்.
இந்தியத்துணைத்தூதுவர் ஸ்ரீ ராகேஷ் நட்ராஜ்.

5.20pm-6.20pm
யாழ்.மண்ணின் புகழ் பூத்த தவில் நாதஸ்வர
வித்துவான்களின் இசைச் சங்கமம்

6.20pm-7.05pm
நாட்டிய நாடகம் "சீதா சுயம்வரம்"
தயாரிப்பு நெறியாள்கை. நட்டுவாங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறை
4 ஆம் வருட மாணவர்கள்.

7.05pm-7.35pm
இணுவையூர் சுந்தரமூர்த்தி கோபிதாஸ்
குழுவினர் வழங்கும் "விரலோசை" வயலின்
இசைக் கச்சேரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

7.35pm-8.05 pm
பரதநாட்டிய நடன நிகழ்ச்சி
தமிழ்நாட்டின் சென்னையிலிருந்து நாட்டிய யுகம்
அக்கடமியின் நாட்டிய நடராஜன் திரு.யுகா சிறிதரன்
அவர்களின் மாணவியர்கள்.

8.05pm-9.15pm
K.P.குமரனின் "நாதசங்கமம்"

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 500 | 500 | 650 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 1400 | 1200 |
| தக்காளி | 700 | 700 | 700 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 180 | 180 | 150 |
| கோவா | 450 | 480 | 400 | 500 |
| கரட் | 400 | 450 | 550 | 800 |
| பூசணி | 160 | 180 | 150 | 240 |
| புடோல் | 320 | 300 | 240 | 300 |
| வாழைக்காய் | 220 | 200 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 500 | 380 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 550 | 480 | 450 | 500 |
| பாகற்காய் | 800 | 800 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 600 | 600 | 500 | 600 |
| லீக்ஸ் | 400 | 380 | 450 | 500 |
| பீற்றூட் | 600 | 600 | 600 | 800 |
| கறிமிளகாய் | 650 | 700 | 500 | 800 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 550 | 500 | 650 | 600 |
| கத்தரிதம்புள்ள | 550 | 250 | 400 | 600 |
| கீரை - 1 பிடி | 150 | 160 | 150 | 200 |
| தேசிக்காய் | 800 | 400 | 500 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 600 | 600 | 600 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 220 | 200 | 200 | 280 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 100 | 40 | 50 | 80 |
| [illegible] | [illegible] | 180 | 100 | 180 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் குடும்ப ஆட்சிக்கு இடமளியாது சிந்தித்து செயற்படுங்கள் - விஜயதாச



(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய தலைமைத்துவத்தை தெரிவு செய்யும் முக்கிய பொறுப்பு அடுத்த வருடம் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

எனவே குடும்ப' ஆட்சியையோ, பரம்பரை ஆட்சியையோ மீண்டும் தோற்றுவிக்காமல் மக்கள் தமது பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும் என்று நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 4 ஆண்டுகளாக மக்கள் துயரங்களையும் நெருக்கடிகளையுமே அனுபவித்து வருகின்றனர். தவறான ஆட்சியாளர்களிடம் நாட்டை ஒப்படைத்ததன் காரணமாகவே அனைத்து மக்களும் அந்த பாவத்தை அனுபவிக்க வேண்டியேற்பட்டது. 2024ஆம் ஆண்டு தேர்தலுக்கான ஆண்டாகும். அடுத்த வருடம் நிச்சயம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும். அதனைக் காலம் தாழ்த்தவோ, மாற்றவோ எவருக்கும் அதிகாரம் இல்லை.

மக்களுக்கு புதிய எதிர்பார்ப்புக்களை எதிர்பார்க்கக் கூடிய ஆண்டாக 2024 அமையும். நாட்டை ஆதரிக்கின்ற, சாதாரண மக்களின் பிரச்சினைகளை உணர்கின்ற, வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய அறிவுள்ள, சர்வதேசத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடிய சிறந்த தலைவரை தெரிவு செய்ய வேண்டியது மக்களுக்கு வழங்கப்படும் பொறுப்பாகும்.

மீண்டும் வர்த்தகர்களிடம் நாட்டைக்கையளிப்பதோ, குடும்ப ஆட்சியை மேற்கொள்ஷபவர்களை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதோ, பரம்பரையிலுள்ளவர்களை தெரிவு செய்வதோ நாட்டின் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கும். எனவே மக்கள் அறிவுடன் சிந்தித்து தீர்மானத்தை எடுக்க வேண்டும். மக்களால் எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்தையும் நாம் ஏற்றுக் கொள்வோம்.

வரி அதிகரிப்பு காரணமாக மக்களுக்கு பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளமை உண்மையாகும். எனினும் நாம் அரசாங்கம் என்ற ரீதியில் விரும்பி அதனை செய்யவில்லை. இதற்கு முன்னர் காணப்பட்ட அரசாங்கங்களால் இழைக்கப்பட்ட பாவங்களுக்கு விமோசனம் தேடும் நிலைமை எமக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே விருப்பமின்றியேனும் அந்த சுமையை நாம் தாங்கிக் கொள்ள முடியவில்லை எனில், எமது எதிர்காலம் நிரந்தரமாக கேள்விக்குறியாகிவிடும் என அவர் தெரிவித்தார். (நி-6)

# 'அஸ்வெசும' திட்டத்திற்கு மீண்டும் விண்ணப்பம் கோர தீர்மானம்

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

அரசாங்கத்தின் வறுமை ஒழிப்பு திட்டமாக வழங்கப்படும் அஸ்வெசும நிவாரண வேலைத் திட்டத்துக்காக ஜனவரி மாதத்தில் மீண்டும் விண்ணப்பம் கோருவதற்கு தீர்மானித்திருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.



நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அஸ்வெசும நிவாரண திட்டத்துக்கு முறையாக விண்ணப்பிக்க முடியாமல் போனவர்கள் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியிருந்தது. அதன் பிரகாரம் ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய. எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இதற்காக மீண்டும் விண்ணப்பம் கோர தீர்மானித்திருக்கிறோம்.

இந்த நிவாரண திட்டத்துக்கு தகுதி இருந்தும் இதற்கு விண்ணப்பிக்க முடியாமல்போன சிலர் இருக்கின்றனர். அதனால் மீண்டும் விண்ணப்பம் கோர இருக்கிறோம். ஆரம்பமாக 20 இலட்சம் குடும்பங்களே இதற்கு தெரிவு செய்துகொண்டோம்.

என்றாலும் தேவை ஏற்பட்டால் பாராளுமன்றத்துக்கு தெளிவுபடுத்தி எங்களுக்கு இந்த வரையறையை மேலும் அதிகரித்துக்கொள்ள முடியும். அதனால் தற்போதுள்ள 20இலட்சம் என்ற வரையறையை 24 இலட்சம் வரை அதிகரித்துக் கொள்ள நாங்கள் எதிர்பார்க்கிறோம் என அவர் தெரிவித்தார். (நி-6)

## புதிய வரி திருத்தத்தால்

# மேலும் பாதிப்படையும் வெதுப்பக தொழில்துறை

## வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து வற் வரி அதிகரிக்கப்படவுள்ளமையினால் வெதுப்பக தொழிற்துறையில் உள்ளவர்கள் வெகுவாக பாதிப்படைவதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வரி அதிகரிக்கப்பட்டாலும் வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலையை அதிகரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது 15 சதவீதமாக காணப்படுகின்ற வற் வரியின் ஊடாக வெதுப்பக தொழிற்துறை பாதிப்படைந்த நிலைமையில் உள்ளது.

இந்தநிலையில் அதனை 18 சதவீதமாக அதிகரிப்பது மேலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

தற்போதைய நிலையில் புதிய வரிதிருத்தத்துக்கு அமைய வெதுப்பக உற்பத்திகளின் விலை அதிகரிக்கப்படுமாயின் நுகர்வோர் வெகுவாக பாதிக்கப்படுவார்கள்.

அத்துடன் வெதுப்பக உற்பத்திகளை கொள்வனவு செய்யும் நுகர்வோரின் எண்ணிக்கையும் வெகுவாக வீழ்ச்சியடையும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# சிறுவர்களிடையே சுவாச நோய்கள் பரவும் அபாயம் - சுகாதாரப்பிரிவு

(கொழும்பு)

சிறுவர்களிடையே சுவாச நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிறுவர்களை சன நெரிசலான இடங்களுக்கு அழைத்துச் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பிரதிபணிப்பாளர்நாயகம், வைத்தியர் ஜி.விஜேசூரிய அறிவுறுத்தியுள்ளார். இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் முகக் கவசம் அணியுமாறும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(நி-6)

# கட்டணம் செலுத்தாத 95,000 பேரின் நீர் விநியோகம் துண்டிப்பு

(கொழும்பு)

கடந்த ஒக்டோபர் மாதம் வரை கட்டணம் செலுத்தாத 95,000 இற்கும் அதிகமான வாடிக்கையாளர்களின் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழ்ங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி ஒக்டோபர் 31 ஆம் திகதியுடன் துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை 95,241 ஆகும்.

மேலும் 12.97 பில்லியன் ரூபா நிலுவைத் தொகையை வாடிக்கையாளர்களிடம் வசூலிக்க வேண்டியுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-6)




**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்-நயினாதீவு**

**மகா கும்பாபிஷேகத்திற்கான ஒலி, ஒளி அமைப்பு வேலைக்கான கூறுவிலை கோரல்**

கோவிலின் மகா கும்பாபிஷேகத்திற்கான ஒலி, ஒளி அமைப்பு சேவைக்கான பொருட்கள், கூலிகள் உள்ளடங்கலாக கூறுவிலைகள் கோரப்படுகின்றது. கூறுவிலையினை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் கோவிலின் காரியாலயத்தில் கூறுவிலைப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி 2024.01.06 ஆம் திகதி பி.ப 1.00 மணிக்கு முன்னதாக காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இட்டுக் கொள்ளுமறு கேட்டுக்கொள்கின்றேன்.

கடிதம் மூலம் அனுப்புபவர்கள் 2024.01.06 ஆம் திகதி பி.ப 1.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவு அஞ்சல் மூலம் **செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ஒலி, ஒளி அமைப்புக்கான கூறுவிலை எனக் காட்டப்படல் வேண்டும்.

**ந.மோகனரூபன், செயலாளர்,**
**அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில், நயினாதீவு.**

(வி-8021)


# தேர்தல் குறித்து இதுவரை முடிவெடுக்கவில்லை-சம்பந்தன்



(கொழும்பு)

தேர்தல் குறித்து இதுவரை எந்தவொரு முடிவும் எடுக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பது அல்லது தமிழ்க் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளரைக் களமிறக்குவதா? அல்லது ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்காமல் தேர்தலைப் புறக்கணிப்பதா? என்பது தொடர்பில் எந்தத் தீர்மானமும் இதுவரை எடுக்கவில்லை.

அத்தோடு தமிழ் மக்கள் பக்கம் நின்றே நாம் தீர்க்கமான முடிவு எடுப்போம் எனவும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலோ அதன் வேட்பாளர் தொடர்பிலோ நாம் அவசரப்படமாட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.திரு.செல்லையா ம

# 100 ஆவது ஜனன தி



## முன்னாள் மு/மல்லாவி மத்திய கல்லூரி அதிபர் திரு. செ.மயில்வாகனம் பற்றி..

மு/மல்லாவி மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.செ.மயில்வாகனம் கடந்த ஆயிரத்து தொளாயிரத்து எழுபது எண்பதுகளில் மல்லாவி மத்திய கல்லூரியில் அதிபராக கடமையாற்றியுள்ளார். அவருடைய ஆளுமைப்பண்பும் ஒழுக்கத்துடனான கட்டுப்பாடும் கண்டிப்பும் சமயப்பற்றும் தமிழ்ப்பற்றும் ஆசிரியப் பணியின் அர்ப்பணிப்பும் ஆர்வமும் கல்லூரியையும் மாணவர்களையும் மிகவும் போற்றத்தக்க வகையில் வளர்ச்சியுற வைத்துள்ளது. அவருடைய இந்த முயற்சியின் பெறுபேறே இன்று வளர்ச்சியுற்று நிற்கும் மு/மல்லாவி மத்திய கல்லூரியும் அவரின் சேவையை பறைசாற்றி நிற்கும் அவரின் பெயரைக்கொண்ட மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலய ஆரம்ப பாடசாலையும் ஆகும்.

கல்லூரியின் மாணவர்களின் கல்வியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கல்லூரியின் காலைப்பிரார்த்தனையின் பின்னர் அவரால் வழங்கப்படும் ஒழுக்கம் பற்றிய கருத்துரைகளும் தமிழ் இலக்கிய. இலக்கண உரைகளும் இன்னும் இவர் கற்பித்த பழைய மாணவர்கள் மனங்களில் நிறைந்துள்ளன. சகல மாணவர்களின் பெயர்கள். அவர்களின் பெற்றோர்களின் பெயர்கள் மற்றும் மாணவர்களின் திறமைகளைக் கூட நன்கு அறிந்த ஆசானாக திகழ்ந்துள்ளார். இந்தப் பிரதேச சமூகத்தினருடன் அவர் கொண்ட உறவு மற்றும் உபசரிப்பு என்பன இன்றும் இச்சமூகத்தினரிடம் நிலைத்துள்ளதை காணமுடிகின்றது. அவர் அணியும் வெள்ளை வேட்டியும் "நசனல்" சேட் பற்றியும் அவர்கள் தம் கண்ணைவிட்டு அகலவில்லை எனக் குறிப்பிடுகின்றனர். அதனால்தான் அவருடைய பெயரை சமூகத்தினர் ஆரம்ப பாடசாலைக்கு சூட்டியுள்ளனர்.

திரு.செ.மயில்வாகனம் அதிபர் ஓய்வுபெற்று நாற்பது ஆண்டுகள் கழிந்தபோதும் அவர் ஆற்றிய சேவையினால் இன்றுவரையும் எம்முடன் மு/மயில்வாகனம் தமிழ்வித்தியாலயம் என்ற பெயருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பெரும் ஆசான் ஆவார்.

**அ.கிஷ்ணதாஸ், அதிபர்,**
**மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்.**



## கல்விக்கு வித்திட்ட பேராசான்

இயற்கை வளங்கொழிக்கும் பச்சைப் பசேலெனும் வயல்வெளிகளால் சூழப்பட்ட மல்லாவி மண்ணில் கல்வி ஒளி பரப்பும் மல்லாவி மத்திய கல்லூரியில் அனைவராலும் போற்றப்படும் வகையில் ஓர் தலைசிறந்த அதிபராகப் பணியாற்றியவர் அமரர். செ.மயில்வாகனம் ஐயா அவர்கள். அமரத்துவம் அடைந்து ஆண்டுகள் பல கடந்தும் இன்று வரை மல்லாவி மக்களின் மனங்களில் அழியாத புகழோடு வாழ்ந்து வருகின்றார் எனக் கூறினால் அது மிகையாகாது. 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மு/மல்லாவி மத்திய கல்லூரியில் இருந்து ஆரம்பநிலைப் பாடசாலையான மல்லாவி ஆரம்ப வித்தியாலயம் பிரிந்து தனியாக இயங்கத் தொடங்கியது. வித்தியாலயத்திற்கான பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உருவாக்கப்பட்ட போது நடைபெற்ற கலந்துரையாடலில் மல்லாவி ஆரம்ப வித்தியாலயம் என்ற பெயரினை தொடர்ந்து பயன்படுத்தலாமா என ஆலோசிக்கப்பட்ட போது பெற்றோர்கள். நலன்விரும்பிகளின் விருப்பின் பேரில் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரான மயில்வாகனம் ஐயா அவர்களின் பெயரை சூட்டுவதென முடிவு செய்தோம். கலந்துரையாடலில் பங்கேற்றிருந்த அன்றைய துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.த.மேகநாதன் ஐயா அவர்களும் இதற்குச் சம்மதம் தெரிவித்தார். அன்றிலிருந்து மயில்வாகனம் ஐயா அவர்களின் ஞாபகார்த்தமாக மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம் என்னும் பெயருடன் இன்றுவரை குறித்த பாடசாலை இயங்கி வருகின்றது.

இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்று மல்லாவி மண்ணிற்குப் பெருமை சேர்த்து வருகின்றனர். மத்திய கல்லூரியின் பிரதான மண்டபமானது மயில்வாகனம் மண்டபம் என்னும் பெயருடனேயே காணப்படுகின்றது. இன்றைய நாட்களில் துணுக்காய் பிரதேசத்தில் காணப்படும் பாடசாலைகள். அரச அலுவலகங்கள் போன்றவற்றில் அதிபர். ஆசிரியர்கள். அரசாங்க உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுவோரில் பெருமளவானோர் மயில்வாகனம் ஐயாவின் மாணவர்களேயாவர். அன்னார் தமது மாணவர்களுக்கு கல்வியை மட்டுமன்றி. ஒழுக்கத்தையும் சமய விழுமியங்களையும் ஊட்டி வளர்த்த ஒருவராவார். இவரிடம் பாடசாலை நேரத்திற்கு மேலதிகமாக மாலை. இரவு வேளைகளிலும் கூட பல மாணவர்கள் பாடசாலையில் தங்கிநின்று கல்வி கற்று சாதனையாளர்களாக மாறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அமரர்.மயில்வாகனம் ஐயா நெற்றியில் நீறு துலங்க ஈடு இணையற்ற சிறந்த அதிபராக கடமையாற்றியமைக்கு மேலுள்ள விடயங்களே சான்று பகர்கின்றதாக அமைகின்றன. இப்பிரதேசத்தில் அவர் ஆற்றிய கல்வி. சமய. சமூகப் பணிகளூடாக என்றும் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருப்பார். அவரின் 100 ஆவது பிறந்த நாளான இந்த நன்நாளில் (27.12.2023) மயில்வாகனம் தமிழ் வித்தியாலயத்தின் முதலாவது அதிபர் என்ற வகையில் அவரை நினைவுகூருவதில் பெருமையடைகின்றேன்.

**திருமதி.கீதா பாலசிங்கம்,**
**முன்னாள் அதிபர்,**
**மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்.**



## பெரு விருட்சத்தின் முதல் விதை

திரு.செல்லையா மயில்வாகனம் அவர்கள் கல்வியுலகில் மல்லாவி மக்களின் ஒரு கலங்கரை விளக்காக திகழ்ந்தவர். 01.01.59 இலிருந்து வ/கல்விளான் குளம் அ.த.க பாடசாலையில் அதிபராக அர்ப்பணிப்புடன் பணியாற்றி 01.01.67 இருந்து மு/மல்லாவி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடமையுணர்வுடன் மிகவும் கண்ணியமான அதிபராக கடமையாற்றினார். நாளும் பொழுதும் பாடசாலை வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். மாணவர் தொகை அதிகரித்தது. ஆரம்பப் பாடசாலை அவரது அயராத உழைப்பால் உயர்தரப் பாடசாலையாக மு/மல்லாவி மகா வித்தியாலயமாக தரம் உயர்ந்தது. அவரது கடின முயற்சியால் பௌதீக வளங்கள் பெருகின. ஆசிரிய வளம் அதிகரித்தது. அவரது புலமையால் சமய இலக்கியம். ஆன்மிகம் வளர்ச்சி உச்சம் தொட்டன. மு/மல்லாவி மகா வித்தியாலயத்தில் பிரதம மண்டபத்திற்கு மயில்வாகனம் மண்டபம் எனப் பெயரிடப்பட்டமை அவரது உயரிய சேவைக்கு ஓர் அடையாளமாகும். 30.12.1983 இல் அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவரது பெயர் இன்றும் அங்கே ஒலித்துக் கொண்டிருக்கிறது. இன்று துணுக்காய் வலயத்திலே பெருவிருட்சமாக விளங்கும் மு/மல்லாவி மத்திய கல்லூரிக்கு முதல் வீரியமான வித்திட்டவர் திரு.செல்லையா மயில்வாகனமே ஆவார். 2011 இலிருந்து மல்லாவி ஆரம்பப் பாடசாலையானது மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம் என்ற பெயரில் சாதனைகள் படைத்து வளர்ந்து வருகிறது. தொண்டாற்றி இன்பம் கண்ட பெருமகனை நன்றி உணர்வோடு வணங்குவோம்.

**திருமதி. அ.வேதநாயகம்,**
**ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்.**

## துணுக்காய் பிரதேசம் துதித்திடும் ஆசான்

அதிபர் திரு.செ.மயில்வாகனம் பற்றி எழுதக் கிடைத்ததற்கு இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். அவரைப் பற்றி என் நினைவலைகளில் நீந்தும் சில சாட்சிகளை இங்கே எழுதுகின்றேன். தமிழறிஞர்கள் பலர் பிறந்த மட்டுவில் அவரது ஊர். தன்னுடைய பாடசாலைக் கல்வியை முடித்து திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சியை முடித்து மத்துகமவில் தன்னுடைய ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார். அங்கே இருந்த காலத்தில் மலையக மக்களின் முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்டார். மலையகத்தில் அவரிடம் படித்த மாணவர்கள் பலர் இன்று தமிழ் அறிஞர்களாக உலா வருவதைக் காணலாம். 1958இல் இலங்கையில் நடந்த இனக்கலவரத்தால் மத்துகமவை விட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய் பிரதேச கல்விளான் அ.த.க. பாடசாலைக்கு தலைமையாசிரியாக மாற்றம் பெற்றார். மிகவும் பின்தங்கிய கிராமமான கல்விளான் பகுதி மக்களை கல்வியிலும் பொருளாதாரத்திலும் உயர்த்த மிகக் கஷ்டப்பட்டார். பண்புல்லுப்பாய் உற்பத்தியை கல்விளானில் தொடக்கி எத்தனையோ குடும்பங்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டினார். 1967 இல் மல்லாவி அ.த.க பாடசாலையின் தலைமையாசிரியராக வந்தார். மாணவர்களோடு மிகப் பாசமாகப் பழகி பல மாணவர்களை தன் பிள்ளைகளாக தன்னோடு வைத்திருந்து கல்வி போதித்தார். அந்தக் காலத்தில் துணுக்காய் பிரதேசத்திற்கு வருவதற்கு பிரயாண வசதிகள் இல்லை. மாங்குளத்தில் இருந்து துணுக்காய் வரையும் உள்ள வீதியை செப்பமிட்டு பஸ் சேவையை ஆரம்பித்து வைக்கும் செயல்களில் அரசாங்க அதிகாரிகளோடு முன்னின்று உழைத்தார். வவுனிக்குளம் ஆலயத் திருப்பணி வேலைகளிலும் பங்கேற்று சிவப்பணி புரிந்தார். வவுனிக்குளம் சிவன் கோயிலிலும் கும்பாபிஷேகத்தின் போது பாடப்பெற்ற திருவூஞ்சல் பாட்டு அவராலேயே எழுதப்பட்டது. தமிழ்ப்பண்பாடு மிக்க அவர் மக்களோடு உறவாடி ஒரு தமிழ்ப் பாரம்பரியத்தையே வளர்த்தெடுத்தார். அவருடைய சேவையைப் பாராட்டி அவர் பெயரால் மு/மல்லாவி மயில்வாகனம் ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. அதேநேரம் மல்லாவி மத்திய கல்லூரியின் முன்வாசலில் திருமயில்வாகனம் ஆசிரியரின் புகைப்படம் வருவோரை வரவேற்கின்றது. இன்று அவர் மறைந்து விட்டாலும் அவரிடம் கல்வி கற்ற மாணவர்களால் அவர் பாராட்டப்படுவது துணுக்காய் பிரதேசத்தின் ஒரு சிறந்த பண்பாகும். மக்கள் மனதிலும் மாணவர்கள் மனதிலும் அவர் என்றுமே வாழ்வார். அமரரின் 27.12.2023 இன்று நூறாவது ஜெயந்தி தினமாகும். அன்னாரின் புகழ் வையம் உள்ள வரைக்கும் ஓங்குக.


**திருமதி. புவனேஸ்வரி நடராசா,**
**ஓய்வுநிலை அதிபர், மல்லாவி.**



## மல்லாவியின் ஒளிவிளக்கு

மல்லாவி மத்திய கல்லூரி இன்று நாடளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பாடசாலைகள் வரிசையில் திகழ மூலகாரணமாக விளங்கியவர் புகழ் பூத்த அதிபர் அமரர்.செல்லையா மயில்வாகனம் அவர்களே. மு/மல்லாவி அ.த.க பாடசாலையாக இருந்த பாடசாலையை மல்லாவி மத்திய மகா வித்தியாலயமாக தரமுயர்த்தி அப்பிரதேச சிறார்களுக்கு கல்வி எனும் அமுதத்தை ஊட்டினார். அதுமட்டுமன்றி இவர் அதிபராக இருந்த காலப்பகுதியிலே மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும் கல்விப்பணி மட்டுமன்றி சமூக. சமயப் பணிகள் ஆற்றினார். அன்னாரது பணிகளை இன்றும் அப்பிரதேச மக்கள் நினைவுகூருகின்றார்கள். தனது ஓய்வுக்காலத்திலும் யாழ்ப்பாணம். திருநெல்வேலி. மல்லாகம் பிரதேசங்களில் மாணவர்களுக்கு கல்வி ஊட்டி வந்தார். இன்று பல துறைகளில் இவரது மாணாக்கர்கள் சிறந்து விளங்குவதைக் காணமுடிகின்றது. இன்று அன்னாரின் நூறாவது அகவை நாளில் நினைவுகூருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**சி.சிவனேஸ்வரன். (ஆசிரியர்)**



மல்லாவி மகா வித்தியாலயம்
அதிபர் அமரர்.திரு.செ.மயில்
ஞாபகார்த்தமாக மயில்வாகனம்
நாமம் சூட்டி ஒலிக்கும் இவ்வே
100 ஆவது ஜனனதின ஒளிக்கீ








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யில்வாகனம் அவர்களின்
# தின நினைவேந்தல்



ாலயம் தற்போது, முன்னைநாள்
செ.மயில்வாகனம் அவர்களின்
வாகனம்தமிழ்வித்தியாலயம் என
இவ்வேளை, 27.12.2023 அமரர்
ஒளிக்கீற்றில் பரிணமிக்கிறார்.







## மறைந்தும் மறையாத மாமனிதர் அமரர்.செல்லையா மயில்வாகனம்- அதிபர் அவர்கள்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க மு/மல்லாவி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை தற்பொழுது பிரசித்தி பெற்ற தேசியப் பாடசாலையாக உயர்ந்து தலைநிமிர்ந்து நிற்பதற்கு உறுதியான அடித்தளம் அமைத்த உத்தமன் மயில்வாகனம் சேர் அவர்களின் 100 ஆவது வயது நினைவுநாளான 27.12.2023 அன்று அவரைப் பற்றிச் சில வரிகள் பதிவிட விரும்புகிறேன். எமது பாடசாலைக்கால ஆரம்ப நாட்களில் "தலைமை வாத்தியார்" என அன்பாகவும் மதிப்பாகவும் அழைக்கப்பட்டவர்.

யாழ்.மாவட்டத்திலிருந்து இவ்வன்னித் திருநாட்டிற்கு சேவைகளில் மிக உன்னதமான கற்பித்தல் தொழிலுக்காகத் தனது குடும்பத்தினருடன் வந்து வசித்து. இப்பிரதேசத்தின் கல்வியை அபிவிருத்தி செய்ய அரும்பணியாற்றியது மட்டுமல்லாது இப்பிரதேச மக்களுடன் ஒருவராக இருந்து அவர்களின் நன்மை. தீமைகளில் கலந்து கொண்டு அறிவுரைகள். ஆறுதல்கள் வழங்கக் கூடிய ஒரு பெரியவராகவும் செயற்பட்டு வந்துள்ளார்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பண்டிதர் சி.கணபதிப்பிள்ளை அவர்களின் மாணவராக இருந்து கல்வியறிவில் புலமை பெற்றவராக விளங் கினார். பாடசாலையின் மாணவர்களின் கல்வியறிவை மட்டுமல்லாது தும்புத் தொழில். விவசாயம் போன்ற பல தொழில் முறைக் கல்விகளையும் மாணவர்கள் பெற்றுக் கொள்ள வசதிகளை ஏற்படுத்தி வழங்கியிருந்தார்.

மாணவர்களுடன் அன்பு கலந்த கண்டிப்புடன் நடந்து கொண்டதன் மூலம் அவர்கள் கல்வி, ஒழுக்கம். ஏனைய பண்புகளில் சிறந்தவர்க ளாகத் திகழ வழியமைத்தார். அவரால் நல்வழிப்படுத்தப்பட்ட பல மாணவர்கள் தற்பொழுது உயர்ந்த நிலைகளில் உள்ளமை அவதானிக்கக் கூடியதாகவுள் ளது. அவர் ஒரு சிறந்த கல்விமானாகத் திகழ்ந்ததுடன் சிறந்த கடவுள் பக்தனாகவும் திகழ்ந்தார். இதன் காரணமாகவே வவுனிக்குளம் பகுதியிலமைந்துள்ள சிவன் ஆலயம். மல்லாவி முருகன் ஆலயம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகவும் பெரும்பங்காற்றினார்.

சிறிதளவேனும் சுயநலத்துக்காக வாழாமல் பிறர் நலத்துக்காக வாழ்ந்து இவ்வுலகை விட்டு நீங்கிய மகான். இவரது நினைவாகவே மல்லாவி ஆரம்பப் பாடசாலைக்கு "மு/மயில்வாகனம் தமிழ் வித்தி யாலயம்" எனப் பெயர் சூட்டப்பட்டமை யாவரும் அறிந்த விடயமாகும்.


தனது மறைவுக்குப் பின்னாரும் இப்பூவுலகில் தனது பெயரை நிலை நிறுத்துவதற்காக நல்ல மக்களை எச்சங்களாக விட்டுச் சென்றுள்ளார். வன்னிப் பெருநிலப்பரப்பில் அவர் சிறந்த சேவையாற்றுவதற்கு அவரது பாரியார் மற்றும் பிள்ளைகளும் பேருதவியாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. பாடசாலை நேரத்திற்கு மேலதிகமாகவும் இவர் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை. க.பொ.த (சா/த). க.பொ.த (உ/த) பரீட்சைகளுக்காகத் தனது வதிவிடத்திலும் மாணவர்களை ஒன்று கூட்டி வழிகாட்டல் வகுப்புக் களை நடத்தி வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது போன்று பொதுப்பரீட்சைகள் யாவும் அவ்வப் பாடசாலை களில் நடைபெறாது. பெரும்பாலும் மாவட்டத்தின் தலைநகரான முல்லைத்தீவிலேயே நடைபெற்று வந்த காலத்தில் தாமாகவே மாணவர்களின் பொறுப்பையேற்று அவர்களைப் பரீட்சைகளுக்கு அழைத்துச் சென்று எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து பரீட்சை எழுதச் செய்து அழைத்து வந்து பெற்றோரிடம் ஒப்படைக்கின்ற உயரிய சேவையை வழங்கியமையும் எவராலும் மறக்க முடியாதவையாகும்.

இவ்வாறு அவரது நற்செயல்கள் சொல்லிலடங்காதவை. இவரது 100 ஆவது வயது நினைவுநாளில் அவரை நினைவுகூருவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

ஓம். சாந்தி சாந்தி சாந்தி.

**திருமதி.பானுமதி காந்தரூபன் (மாணவி),**
**நிர்வாக அலுவலர், பிரதேச செயலகம், துணுக்காய்.**



## சொல்லிலும் செயலிலும் ஒன்றாக இருந்தவனே!

மல்லாவிப்பதி வந்து மகத்தான பணியாக கல்விப்பணி புரிந்து கருத்துடன் உழைத்தவனே. எல் லோரும் போற்றுகின்ற எமதருமை ஆசானே. சொல்லாலும் செயலாலும் ஒன்றாக இருந்தவனே. வல்லோ னாய் இருந்து எமை வகை கூறி வளர்த்தவனே. நல்லோராய் நாம் வாழ நலத்துடனே கண்டிப்பாய் - இருந்து நில்லாது என்றும் நீடிக்கும் பல நூற்றாண்டு உன் புகழ். செல்லையா புதல்வன் சேர் மயில்வாகனம் அதிபரே.

**தெ.பாலசுப்பிரமணியம்,**
**மல்லாவி மகா வித்தியாலய பழைய மாணவன்.**

## வாழ்வாங்கு வாழ்ந்த பேராசான்


திரு.செல்லையா மயில்வாகனம் அவர்கள் வாக்கும் வாழ்வுமாக வாழ்ந்து காட்டிய பெருமகனார். பேராசான்ஆவார். ஆத்மார்த்த மாக அன்னாரைப் பணிகின்றேன். 27.12.2023 இன்றைய தினம் 100 ஆவது அகவையிலே ஒளி வீசுகின்றார். அன்னாரின் பாதங்களைப் போற்றுவோம்.துதிப்போம்.புகழ் பாடுவோம். அகரத்தை சுழியலிட்டு என் கல்வியைத் தொடக்கி வைத்த ஆசான் ஆவார்.01.01.1967 தொடக்கம் 31.12.83 வரை கல்விப்பணிக்கு அர்ப்பணிப்புச் செய்தவர். அயராத சேவை. விடாமுயற்சி இவைகளால் கல்வி வளர்ச்சியை உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றவர். வளங்களற்ற துணுக்காய் பிரதேசத்திலே பொறுமை. கடமை. தியாகம் என்பவற்றால் கல்வியின் வளத்தை மேம்படுத்தி பெருவெற்றி கண்டவர். க.பொ.த உயர்தர வகுப்பு வரை நிலைநாட்டியவர்.

மாணவர் பெருக்கத்தால் வகுப்பறைகளைக் கட்டி வளப்படுத்தியவர். மல்லாவி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையை மல்லாவி மகா வித்தியாலயமாக மகுடம் சூட்டியவர் என்றால் மிகையாகாது. மல்லாவி பாடசாலை வளாகத்தில் ஆலமரமும் பனைமரமும் இணைந்து இவர் நாமம் சொல்லும். 31.12.1983 இல் அதிபர் சேவையிலே ஓய்வு பெற்றார். அவ்வித சூழலிலும் திருநெல்வேலியில் மாணவர்கள் சூழ்ந்தனர். அங்கும் கல்விப்பணியைத் தொடர்ந்தார். ஆக்கங்கள் புனைவதில் வல்லவர். நல்லைக்கந்தன் பாமாலை என்னும் நூலை ஆக்கம் செய்திருந்தார்.

இறுதியிலே 13.08.1993 அன்று இறைவனடி சேர்ந்தார். எனினும் பெற்றோர்கள். நலன்விரும்பிகள் விருப்பத்திறகமைய 2011 இல் மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம் என ஜனனம் கொண்டு பிரகாசிக்கின்றார். 100 ஆவது அகவையிலே பரிணமிக்கிறார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

**சிவலிங்கம் கமலாவதி,**
**விசுவமடு, மல்லாவி மகா வித்தியாலய பழைய மாணவி.**



## உழைப்பால் உயர்ந்தவர்

அதிபர் திரு. மயில்வாகனம் அவர்களின் நூறாவது ஜனன தினத்தில் இச்செய்தியைப் பகிர்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1974ஆம் ஆண்டு ஜ"லை மாதம் எனது வேலை நிமித்தம் மல்லாவி மகா வித்தியா லயத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு அதிபர் அறையில் ஆஜானு பாகுவாக ஒருவர் இருந்தார். வெள்ளை வேட்டி. நேஷனல். சால்வை சகிதம். அவர் தான் திரு.மயில்வாகனம் அவர்கள். அவரிடம் நான் என்னை அறிமுகம் செய்து. சென்ற விடயத்தையும் சொன்னேன். முகம் மலர்ந்து என்னை விசாரித்து அளவளாவினோம்.

நான் மாதந்தோறும் இரு தினங்கள் பாடசாலைக்கு வர வேண்டி இருப்பதாகவும் இரு இரவுகள் தங்க எனக்கு ஒரு இடம் ஒழுங்கு செய்து தரும்படியும் கேட்ட பொழுது அவர் லாவகமாக அது சிரமம் இல்லாத வேலை. நீங்கள் இங்கு பாடசாலையிலேயே தங்குவதற்கு நான் ஒழுங்கு செய்வேன் என்று முகமலர்ச்சியுடன் கூறினார். அவரது பரந்த தோற்றத்தைப் போல உள்ளமும் பரந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்தப் பாடசாலைக்கு முன்னர் இவர் கல்விளான் குளம் என்னும் இடத்திலுள்ள மிகவும் கஷ்டமான ஆரம்பப் பாடசாலையில் தலைமை ஆசிரியராகக் கடைமையாற்றியதாக அறிந்திருந்தேன். அவருடைய அயராத உழைப்பையும் முயற்சியையும் அவதானித்த மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு.சிமியாம்பிள்ளை அவர்கள் இங்கு வெற்றிடம் வரும் போது இதற்கு உகந்தவர் எனக்கருதி நியமித்தார்.

இப்பாடசாலை பல பௌதீக வளங்களைக் கொண்டிருந்தது. அதிபர் பணிமனை, 8 ஆசிரியர் பணிமனைகள் அங்கு கட்டப்பட்டிருந்தன. மக்கள் எல்லோரும் விவசாயத்தையே செய்து கொண்டிருந்தார்கள். திரு.மயில்வாகனம் அவர்கள் காலந்தோறும் பெற்றோர்களைக் கூட்டி பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி பற்றியும் அவைகளை வளர்க்க ஆலோசனை கூறி அல்லும் பகலும் அயராது உழைத்து இந்த பாடசாலையை சிறப்புற நடாத்தி வந்தார். ஆசிரியர்களோடு மிக அன்பாகப் பழகி அவர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவதில் சமர்த்தராக விளங்கினார். நான் அங்கு தங்குகின்ற இரு நாட்களும் இரவு போசனத்திற்குப் பின் இருவரும் உரையாடுவோம். இவரி டம் நல்ல தமிழ் புலமை இருப்பதை அவதானித்தேன். பழைய சங்க இலக் கியங்கள், இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம் ஆகிய எல்லாம் இடை இடையே கலந்து சுவைக்கக் கூடியதாக இருந்தது. நான் இவ்வருடம் பண்டித மணி அவர்களிடம் படித்தவற்றை மீட்க நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது.

பாடசாலை சிறிது சிறிதாக வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கிச் சென்று பிள்ளைகளுடைய எண்ணிக்கையும் அதிகரித்தன. பெரிய விருட்சமாக வளர இவருடைய அயராத உழைப்பும் முயற்சியும் காரணமாக இருந்தது. அவரது சிந்தனை முழுவதும் பாடசாலை பற்றியே இருந்தது. மற்றோர் தோட்டம் செய்வதிலும் வயல் செய்வதிலும் ஈடுபட்ட போதும் அவர் அவற்றை செய்யவில்லை.

நான் அங்கு சென்ற காலத்தில் இவரது தம்பி மகனான வேல்நம்பி சிறுவனாக 9ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அவர் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் முகாமைத்துவ பீடாதிபதியாகவும் விளங்கினார். அவரது தமிழ்ப் புலமைக்கும் அறிவுக்.தும் வித்திட்டவர் மயில்வாகனம் அவர்களே.

நான் 8 வருடங்களாக அவர்களுடன் தங்கி. உணவருந்தி அவருடைய குடும்பத்தில் ஒரு உறுப்பினர் போலவே பழகினேன். அவருடைய சேவையை மதித்த அவ்வூர் மக்கள் மல்லாவி மத்திய கல்லூரியில் ஆரம்பப் பாடசாலைக்கு மயில்வாகனம் வித்தியாசாலை எனப் பெயரிட்டமை மிகவும் போற்றுதற்குரியது.

மயில்வாகனம் அவர்களின் தன்னலமற்ற சேவைக்குப் பிரதிபலனாக இறைவன் அவர்களின் சந்ததியை மிக நன்றாக ஆக்கியுள்ளார்.

"தக்கார் தகவிலார் என்பது அவர் தம்
எச்சத்தாற் காணப்படும்"

**நண்பன் வ.தானையா,**
**முன்னை நாள் கல்விப்பணிப்பாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

### மகம் உடல்நலனில் கவனம்

ஞான மோட்சக்காரகனான கேது பகவான், ஆத்மகாரகனான சூரியனின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு டிசெ.20, 2023 முதல் ராசிக்கு 7 ஆம் இடமான களத்திர ஸ்தானத்தில் கண்டகச் சனியாக சஞ்சரிக்கப் போகிறார் சனி பகவான்.

உங்கள் ராசி நாதனுக்கு சனி பகையானவர் என்றாலும், ஆறாம் வீட்டில் அவர் சஞ்சரித்தபோது அபரிமிதமான நற்பலன்களை வழங்கி வந்தார். ஒவ்வொரு கிரகமும் அவர்கள் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன் தரக்கூடியவர்கள் என்றாலும், சனி அவரவரின் கர்ம வினைக்கேற்ப பலன் தரக்கூடியவர். 7 ஆம் வீடான சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் குடும்பத்தில் பல பிரச்சினைகளை உருவாக்குவார். அலைச்சலை அதிகரிக்க வைப்பார். இருக்கும் இடத்தை விட்டு வெளியூர் சென்று வசிக்க வைப்பார். வேண்டாத நண்பர்களால் சங்கடங்களை உருவாக்குவார். கூட்டுத் தொழிலில் நெருக்கடி அதிகரிக்கும். எதிர்பாலினரால் தடுமாற்றம் உண்டாக்குவார். நேற்றுவரை அதிநட்பாக இருந்தவர்களை எல்லாம் விலகும்படி செய்வார். வாழ்க்கைத் துணையுடன் பிரச்சினைகளை அதிகரிப்பார். குழப்பத்தை ஏற்படுத்துவார்.

### அதிர்ஷ்ட காலம்

சதயம் நட்சத்திரத்தில் சனி வரும் காலமான மார்ச் 16. 2024 - ஜூன் 19. 2024 வரையிலும், நவ 4.2024 - பெப் 27, 2025, வரையிலும் உங்களின் முயற்சி வெற்றி பெறும். செயல்கள் லாபமாகும். சங்கடங்கள் விலகும். நினைத்ததெல்லாம் நிறைவேறும். புதிய வாய்ப்பு உருவாகும். வருமானம் அதிகரிக்கும். புதிய சொத்து, வாகனம் உண்டாகும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பொறுப்பும் பதவியும் வந்து சேரும். சனிபகவான் அஸ்தமன, வக்கிர காலங்களில் கண்டகச் சனியின் பாதிப்பு இருக்காது.

### ராகு - கேது சஞ்சாரம்

ஏப் 26. 2025 வரை ராகு மீனத்திலும், கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் இனம் புரியாத குழப்பம் ஏற்படும். குடும்பத்தில் சங்கடம் அதிகரிக்கும். பொருளாதாரத்தில் நெருக்கடி தோன்றும். தொழிலில் தடையும், கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாத நிலையும் உருவாகும். உடல் நிலையில் எதிர்பாராத சங்கடம் தோன்றும். ஏப் 26. 2025 முதல் ராகு கும்பத்திலும், கேது உங்கள் ஜென்ம ராசியிலும் சஞ்சரிக்கும் நிலையில் முயற்சியில் தடைகள் ஏற்படும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். வேலையில் அலைச்சல், நிம்மதி இல்லாத நிலை ஏற்படும். நட்புகளுக்கிடையே மனக்கசப்பு உண்டாகும். வாழ்க்கைத் துணையுடன் சங்கடங்கள் தோன்றும். குடும்பத்தில் சங்கடம் அதிகரிக்கும். எதிர்பாலினரால் அவமானங்களை சந்திக்க நேரிடலாம் எச்சரிக்கை அவசியம்.

### குரு சஞ்சாரம்

ஏப் 30.2024 வரை 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் எண்ணங்கள் நிறைவேறும். செல்வாக்கு உயரும். வெளி வட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு உயரும். எல்லாவிதமான சங்கடங்களையும் சமாளித்து வெற்றி பெறும் நிலை உண்டாகும். மே 1, 2024 - மே 13, 2025 காலத்தில் 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் செய்யும் தொழிலில் சங்கடம் நெருக்கடி ஏற்படும். உத்தியோகத்தில் பிரச்சினைகள் தோன்றும். பொருளாதாரத்தில் தடை ஏற்படும். மே 14, 2025 முதல் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் இழந்த செல்வாக்கு மீண்டும் உயரும். முயற்சிகள் யாவும் வெற்றியாகும். நினைத்ததை நிறைவேற்றும் அளவிற்கு உங்கள் நிலை உயரும். திருமண வயதினருக்கு வரன் வரும். சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும்.

### பொதுப்பலன்

மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்படும். கூட்டுத்தொழிலில் பிரச்சினைகள் தோன்றும். நட்புகளுக்கிடையே கசப்பு உண்டாகும். செயல்களில் டென்ஷன் உண்டாகும். அதனால் வார்த்தைகளில் கோபம் வெளிப்படும். எந்த இடத்திலும் இணக்கமாக இருக்க முடியாமல் போகும். வாழ்க்கைத் துணையுடனும் சங்கடம் ஏற்படும். உடல் நிலையில் எதிர்பாராத பாதிப்பு உண்டாகும். புதிய முயற்சிகளில் இழுபறி ஏற்படும்.

வினைதீர்க்கும் விநாயகர், சிவனை வணங்கினால் சங்கடம் விலகும்.

### பூரம் சங்கடத்திலும் யோகம்

களத்திரக்காரகன் என்று கூறப்படும் சுக்கிர பகவான், ஆத்மகாரகனான சூரியனின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு டிச.20, 2023 முதல் உங்கள் ராசிக்கு 7ம் இடத்தில் கண்டகச் சனியாக, சஞ்சரிக்கப் போகிறார் சனி பகவான். உங்கள் ராசிநாதனுக்கு சனிபகவான் பகையானவர் என்றாலும் உங்கள் நட்சத்திரநாதன் சுக்கிரனுக்கு சனி நட்பானவர். கோச்சார ரீதியாக கிரகங்கள் சஞ்சரிக்கும் போது அவர்கள் எந்த இடத்தில் சஞ்சரிக்கிறார்களோ அந்த இடத்திற்கேற்ப பலன் வழங்கிடக் கூடியவர்களாகிறார்கள். இதில் சனி ஒவ்வொருவரின் கர்ம வினைக்கேற்ப பலன்களை அளந்து வழங்கிடக் கூடியவர். சனி 7ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் போது பிரச்சினை, கருத்து வேறுபாடு, அலைச்சல் அதிகரிப்பு, தீயோர் சேர்க்கை, அவப்பெயருக்கு ஆளா




## 20.12.2023-06.03.2026

குதல், வாழ்க்கைத் துணையின் உடல் நிலை பாதிப்பு, வாழ்க்கைத் துணையிடமிருந்தும் பிள்ளைகளிடமிருந்தும் தனித்து வாழும் சூழல், எதிர்பாலினரால் அலைச்சல், பாதிப்பு, விரயம் உண்டாகும் என்பது ஜோதிடவிதி. இருந்தாலும் ஒருவரின் சுய ஜாதகத்தில் அமைந்துள்ள கிரக அமைப்பு, திசா புத்திக்கேற்ப இதில் மாறுதல் ஏற்படும்.

### அதிர்ஷ்ட காலம்

அவிட்டம் நட்சத்திரத்தில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலமான டிசெ.20. 2023 - பெப் 15.2024 வரையிலும், பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 29. 2025 - ஜூலை 2. 2025 வரையிலும், நவ.17. 2025 - மார்ச் 6. 2026 வரையிலும் அஸ்தமன, வக்கிர காலங்களிலும் நன்மையான பலன் கிடைக்கும். 7 ஆம் இடத்துச் சனியின் பாதகமான பலன்கள் விலகும். நினைத்ததை சாதித்திடக் கூடிய அளவிற்கு முயற்சிகள் யாவும் இருக்கும். பொன், பொருள் சேர்க்கையுடன் புதிய வாகனம், நவீன பொருட்கள் வாங்குவீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும்.

### ராகு - கேது சஞ்சாரம்

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில், உங்கள் நிலையில் எதிர்பாராத மாற்றம் உண்டாகும். எதிர்பாலினரால் சங்கடங்கள் தோன்றும். உடல் நிலையிலும் பாதிப்பு அதிகரிக்கும். குடும்பத்தில் நிம்மதியற்ற நிலை உருவாகும். ஏப் 26.2025 முதல் ராகு கும்பத்திலும் கேது உங்கள் ஜென்ம ராசியிலும் சஞ்சரிக்கும் நிலையில், மனதில் இனம் புரியாத சங்கடங்கள் தோன்றும். வாழ்க்கைத் துணையுடன் பிரச்சினை உருவாகும். எதிர்ப்பாலினரால் குடும்பத்திற்குள் தேவையற்ற சங்கடங்கள் ஏற்படும். பொருளாதார ரீதியாக நெருக்கடி அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் உடல் நிலையில் பாதிப்பு ஏற்படும் என்பதால் இக்காலத்தில் குடும்ப நலனில் அக்கறை கொள்வதும், வாழ்க்கையின் மீதும் தொழிலின் மீதும் கவனம் செலுத்துவதும் சங்கடங்களில் இருந்து உங்களைப் பாதுகாக்கும்.

### குரு சஞ்சாரம்

ஏப் 30. 2024 வரை 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் ராசிக்கு உண்டாவதால் உங்கள் செல்வாக்கு உயரும். எதிர்பார்த்த ஒவ்வொன்றும் லாபத்தில் முடியும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். இக்காலம் உங்களுக்கு யோக காலமாக இருக்கும். மே 1.2024 - மே 13. 2025 வரையிலும் 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் சங்கடங்கள் அதிகரிக்கும். தொழிலில், உத்தியோகத்தில் நெருக்கடி தோன்றும். பணத்தேவை அதிகரிக்கும். முதலீடுகள் அதிகமாக செய்தும் எதிர்பார்த்த லாபம் உண்டாகாமல் போகும். மே 14. 2025 முதல் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் மீண்டும் செல்வாக்கு உயரும். பணவரவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பிரச்னைகள் விலகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். புதிய இடம், மனை, பொன் பொருள் என்று வாங்கும் நிலை உண்டாகும். இக்காலம் உங்கள் வாழ்க்கையில் செழிப்பான காலமாக இருக்கும்.

### தொழில்

தொழிலில் சில சங்கடங்கள் ஏற்படும். கூட்டுத்தொழில் இக்காலத்தில் பிரச்சினைகளில் முடியும். புதிய முதலீடுகள் எதிர்பார்த்த லாபத்தை ஏற்படுத்தாமல் போகும். சினிமா, சின்னத்திரை, பேன்சி ஸ்டோர்ஸ், ஜவுளி, கவரிங், நகை, வாகன வியாபாரங்களில் லாபம் அதிகரிக்கும்.

### பணியாளர்கள்

பணிபுரியும் இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். உங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தவறானவை என நிரூபிக்கப்படும். விரும்பிய இடமாற்றம், பதவி உயர்வு உண்டாகும். தனியார் நிறுவன பணியாளர்கள் எதிர்பார்த்த ஊதிய உயர்வை அடைவர். முதலாளிகளால் மதிக்கப்படுவீர்கள்.

### கல்வி

இக்காலத்தில் மாணவர்களின் கவனம் சிதறுவதற்கு வாய்ப்புண்டு. மனம் அலைபாயும். ஆனால், எதிர்காலத்தைப் பற்றி யோசித்து படிப்பில் கவனம் செலுத்துவதும், ஆசிரியர்களின் ஆலோசனைகளைக் கேட்டு செயற்படுவதும் தேர்வில் வெற்றியை உண்டாக்கும். மேற்கல்வி எளிதாக இடம் கிடைக்கும்.

### உடல்நிலை

உடல் நிலையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கும். அஷ்டம ராகுவும், சப்தம சனியும் போட்டி போட்டு பாதிப்புகளை உண்டாக்குவார்கள் மருத்துவ செலவு அதிகரிக்கும். சிலருக்கு மறைமுக, பரம்பரை நோய்கள் தோன்றி சங்கடப்படுத்தும் என்பதால் இக்காலத்தில் ஒழுக்கம் என்பது மிக அவசியமாகும்.

### குடும்பம்

பூர்வீக சொத்துகளில் இருந்த சங்கடங்கள் விலகும். புதிய வாகனம், நவீன பொருட்கள் வாங்குவீர்கள். பிள்ளைகள் நிலை உயரும். அவர்களால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய இடம் வாங்கி விரும்பியபடி வீடு கட்டி குடியேறுவீர்கள். வாழ்க்கைத்துணையை அனுசரித்துச் செல்வதால் மனஅமைதி நிலைக்கும்.

### உத்திரம் 1 ஆம் பாதம் நல்ல நேரம் வந்தாச்சு

ஆத்மகாரகன் என்று கூறப்படும் சூரிய பகவான் நட்சத்திரத்தில் நீங்கள் பிறந்திருந்தாலும், 1ஆம் பாதத்தில் பிறந்த வர்களுக்கு சூரியனே ராசிநாதனாகவும், 2.3.4ஆம் பாதங் களில் பிறந்தவர்களுக்கு வித்யா காரகனான புதன் ராசிநாதனாகவும் உள்ளனர்.

உங்கள் நட்சத்திரநாதனுக்கு சனி பகையானவர் என்றாலும் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை வழங்கிடக் கூடியவராகிறார். உத்திரம் 1ஆம் பாதத்தினருக்கு சனி சப்தம ஸ்தானத்திலும், சஞ்சரிக்கிறார். இதனால் 1 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு வீண் அலைச்சலையும், குடும்பத்தில் நிம்மதியற்ற நிலையையும், பொருளாதாரத்தில் தடைகளையும், உடல்நலனில் சங்கடங்களையும் வழங்குவார்.

### அதிர்ஷ்ட காலம்

சதயம் நட்சத்திரத்தில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16.2024 - ஜூன் 19. 2024 வரையிலும், நவ 4. 2024 - பெப் 27. 2025 வரையிலும், அஸ்தமன வக்கிர காலங்களிலும் 4 பாதங்களில் பிறந்தவர்களுக்கும் நன்மையான பலன்களை வழங்குவார். சங்கடங்கள் விலகும். நெருக்கடிகள் இல்லாமல் போகும். முயற்சி வெற்றியாகும்.

### ராகு - கேது சஞ்சாரம்

ஏப் 26. 2025 வரை ராகு மீனத்திலும், கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் வாழ்வில் தடுமாற்றம் ஏற்படும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு இழுபறியாகும். ஏப் 26. 2025 முதல் ராகு கும்பத்திலும், கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் நிலையில், 1ஆம் பாதத்தினருக்கு மனதில் குழப்பம் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகும். குடும்பத்தில் பிரச்சினை அதிகரிக்கும். நட்புகளும் உங்களை விட்டு விலகிச் செல்வர்.

### குரு சஞ்சாரம்

ஏப் 30.2024 வரை 1 ஆம் பாதத்தினருக்கு பாக்ய ஸ்தானத்திலும், 2.3.4 ஆம் பாதத்தினருக்கு அஷ்டம ஸ்தானத்திலும். மே 1. 2024 - மே 13. 2025 வரை 1 ஆம் பாதத்தினருக்கு ஜீவன ஸ்தானத்திலும், 2.3.4 ஆம் பாதத்தினருக்கு பாக்ய ஸ்தானத்திலும். மே 14.2025 முதல் 1ஆம் பாதத்தினருக்கு லாப ஸ்தானத்திலும், 2.3.4ஆம் பாதத்தினருக்கு ஜீவன ஸ்தானத்திலும் குருபகவான் சஞ்சரிப்பார். 1 ஆம் பாதத்தினருக்கு ஏப் 30.2024 வரை எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவார். செல்வாக்கை அதிகரிப்பார். பணம், பதவி, பட்டம் என்ற நிலையுடன் உங்களை வெளி உலகத்திற்கு அறிமுகம் செய்வார். மே 13. 2025 முதல் 1 ஆம் பாதத்தினருக்கு யோகத்தை அதிகரிப்பார். குடும்பம், தொழில், உத்தியோகம் என அனைத்திலும் மகிழ்ச்சியை ஏற்படுத்துவார். பணவரவை அதிகரிப்பார். எதிர்பார்ப்பை நிறைவேற்றுவார்.

### பொதுப்பலன்

இந்த சனிப் பெயர்ச்சி காலத்தில் 1ஆம் பாதத்தினருக்கு குருபகவானின் சஞ்சாரமும், மிகப்பெரிய யோகத்தை வழங்கும். இதுவரை இருந்த நெருக்கடிகள் விலகும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் எல்லாம் வெற்றியாகும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். பொருளாதார நிலை உயரும். அரசு ஊழியர்கள், அரசியல்வாதிகள், கலைஞர்கள் செல்வாக்கு உயரும். எண்ணியதை நிறைவேற்றிக் கொள்ளும் காலமாக இருக்கும்.

### தொழில்

தொழிலில் இருந்த நெருக்கடிகள் விலக ஆரம்பிக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். கூட்டுத் தொழிலில் விலகிப் போன பங்குதாரர்கள் மீண்டும் இணைவார்கள். ஏற்றுமதி இறக்குமதி, பங்கு வர்த்தகம், ஆட்டோ மொபைல்ஸ், எலக்ட்ரானிக்ஸ், மெடிக்கல், மருத்துவம், பப்ளிகேஷன்ஸ், யூடியூப், சினிமா, விவசாயம், டிரான்ஸ்போர்ட், வழக்கறிஞர், மருத்துவர் தொழில்களில் லாபம் அதிகரிக்கும்.

### கல்வி

படிப்பில் கவனம் அதிகரிக்கும். ஆசிரியர்கள் ஆலோசனையால் எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்கும். மருத்துவம், பொருளியல் துறை மாணவர்கள் வளர்ச்சி காண்பர். எதிர்பார்ப்பு நிறைவேறும். சிலருக்கு வெளிநாட்டிற்கு சென்று கல்வி பயில வாய்ப்பு உண்டாகும்.

### உடல்நிலை

இதுவரை இருந்த சங்கடங்கள் விலக ஆரம்பிக்கும். தொற்று, பரம்பரைநோய் போன்றவற்றால் அவதிப்பட்டு வந்த நிலை மாறும். இதுவரை சிகிச்சை பெற்று வந்தவர்கள் இனி நோயின் தன்மையறிந்து சிகிச்சை பெற்று குணமடைவர்.

### குடும்பம்

தொடர்ந்து வந்த நெருக்கடியில் இருந்து மீள்வீர்கள். குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலகும். தம்பதிகளிடையே ஒற்றுமை அதிகரிக்கும். புதிய சொத்து சேர்க்கை உண்டாகும். இழுபறியாக இருந்த சொத்து விவகாரம் முடிவிற்கு வரும். பணத்தட்டுப்பாடு விலகும்.

பரிகாரம் சனீஸ்வரருக்கு நல்லெண்ணெய் தானம் செய்து தீபமேற்ற நன்மை அதிகரிக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தசுவாமி யோகர்சுவாமியிடம் தீட்சாநாமம் பெற்ற தினம் இன்று

இன்றைய திருவாதிரை நன் நாளில் தான் கொழும் புத்துறை மாமுனிவர் யோகர் சுவாமிகளின் நேரடிச் சீடர் களின் ஒருவரான சந்தசுவாமி என்று குருபரனால் தீட் சாநா மம் சூட்டப்பட்ட ஜேம்ஸ் இராம் போதம். இலங்கையின் கடைசி ஆளுநராக பிரித்தானிய முடிக் குரிய இளவரசியால் நியமிக் கப்பட்ட சோல் பரிபிரபுவின் மகன் (1949- 1954)

சந்தசுவாமிஎன்று அழைக் கப்படும் ராம்ஸ் போதம் இள மைக் காலத்தில் மிகவும் புத் திக் கூர்மையான மாணவ னாகத் திகழ்ந்தார். நண்பர் களையும் அபிமானிகளாக வும் கவரும் இயற்கையான சுபாவம். அவர் ஈடனில் நட் சத்திரமாக - இயற்கையி லேயே பலசாலியாக விளை யாட்டு விரும்பியாக பள்ளி நாட்களில் காணப்பட்டார்.

ஆனால் அவர் சாதாரண வாழ்க்கையை விட்டு ஒரு மரபு சாராத தேடலில் இறங்கி னார். அவர் தத்துவத்தை கற்கவிரும் பினார். எனினும் தமது தேட லுக்குரிய கேள்விகளுக்கு விடைகாண முடியவில்லை.

இவர் ஜேர்மனியில் கல்வி கற்கும்போது ஒரு பிரசித்திபெற்ற ளூஹ ஆசிரியருக்கு அறிமுகப் படுத்தப்பட்டார். இவர்களுடைய செயற்பாடு இரகசியமாக இருந் தது. இது யதார்த்தமான முறை யில் எண்ணுதல், செயற்படு தல் சுயமாகப் புரிந்து கொள்ளல், சுய அவதானிப்புக்கள், மனதில் நிகழும் முரண்பாடுகள் மற்றும் இடைவிடாத மாய எண்ணங் களும் அதனை அடையாள ப்படுத்தலுமாகும்.

இக்காலத்தில் தான் ராம்ஸ் போதம் தனது வாழ்க்கைத் துணை அத்தியானவ சந்தித்தார். அத்தியா இவருடைய நடை உடையில் கவரப்பட்டார். இவர் கள் இருவரும் மிகவும் சந்தோ ஷமாக வாழ்க்கைப் பயணம் ஓடியது. இருவரும் தமது எண் ணங்களையும் எதிர்பார்ப்புக்க ளையும் ஒருவ ருக் கொருவர் பரிமாறிக் கொண் டனர். அதன் பின்னர் ராம்ஸ் போதத்தின் வாழ்வில் பேரிடி யான நிகழ்வு ஒன்று நடந்தது. தான் விரும்பி மணம் முடித்த அத்தியா 1949 இல் பிள்ளைப் பேற்றின் போது தாயும் சேயும் இறந்தனர். ,


ஜேம்ஸ் ராம்ஸ் போதம் 1950 இல் இலங்கைக்கு வந்து தனது ஜேர்மனிய நண்பர் சுவாமி கௌரிபாலனுடன் இலங்கை யில் வடபாகத்தில் அமைந்த தொண்டைமானாறு செல்வசந நிதி முருகன் ஆலய வளாகத் தில் ஒரு குடிசை அமைத்து ஆச்சிர மத்தில் சில காலம் தங்கினார்.

அக்குடில் அமைந்த இடம் மரணத்தை உண்டு பண்ணக் கூடிய விஷப் பாம்புகள்,தேள் நிறைந்த இடம் அங்கு வேறு சில துறவிகளும் இருந்தனர். அவர்கள் தியானம் போன்ற வற்றில் ஈடுபடுவதுடன் ஆலய சூழலில் கிடைக்கும் பிரசாதங் களை உண்டு வாழ்ந்தனர். வசதியானசெல்வப் பின்னணி யில் வாழ்ந்த ஜேம்ஸ் ராம்ஸ் போதம் இப்படியான துறவு வாழ்க்கை மேற்கொண்டார்.

இவர் தேடியசெல்வம் எல் லாம் நல்லவழியில் செலவு செய்ய எண்ணினார். இதற்கு முன்னர் தீபெத், இந்தியா,இல ங்கை என பல நாடுகளிலும் சுற்றித் திரிந்தார். 1953 இல் ஜேர்மன் சுவாமி கௌரிபால ஜேம்ஸ் ராம்ஸ் போதத்தை யோகர் சுவாமி க்குஅறிமுகம் செய்யும் போது கவனர் ஜென ரலின் மகன் என்று கூற நான் தான் உனக்கு ஆளுனரும்தள பதியும்என்று சுவாமி கூறினார். 1955இல் ஜேம்ஸ்ராம்ஸ் போதம் கைதடியில் வசித்தமார்க்கண்டு சாமிகளைகாணச் சென்றார். பின்னர் ராம்ஸ்போதம் செல்வச் சந்நிதி,கதிர்காமம் போன்ற திருத்தலத்திற்கு யாத்திரை சென்றார்.

மீண்டும் 1957இல் இங்கி லாந்துக்கு திரும்பிச் சென்றார். கிரேக்க பழைமையான தேவால யத்தில் சேரும் திட்டம் இருந் தது. அநேஸ்மலைக்கு பலமுறை சென்றுவந்தார். இவரது சுவி சேக்ஷ நடக்கவிருந்த நா க்கு முதல் நாள் யோகர்சுவாமி ஜேர் மன் சுவாமி கௌரிபால ஊடாக ஒரு செய்தி அனுப்பி னார்.

இதனால் அடுத்தநாள் நடை



பெற இருந்த நிகழ்வு நடைபெற வில்லை. இதனால் ராம்ஸ் போதம் தனது தீர்மா னத்தை மாற்றி உண்மை யைத் தேடி இலங்கைக்குப் பயணமானார்.

உண்மையான குருவைத் தேடினார். இராம்ஸ் போதம் கொழும்புத்துறை அடைந்த போது "யோகசுவாமி இங்கிலா ந்தில் கடவுள் இல்லையா" என றார். தான் வாழ் நாள் முழு தும் தேடிய குரு யோகசுவாமிஎன்று உணர்ந் தார். அவர் தான் தேடியதற்கு ஆத்ம திருப்தியு ள்ள விடை கிடைத்தது.

குருவை சந்தித்ததும் தனது நண்பர்களை செல்வச் சந்நிதியில் கைவிட்டு யாழ்ப் பாணம் சிவதொண்டன் நிலை யத்தில் தனது பெரிய குருநா தன் யோகர் சுவாமியின் ஆணைப்படி சுவாமி ராம்ஸ் போதம் (சந்தசுவாமி) தங்கு வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட் டது. அவர் அங்குதியானப் பயிற் சியில் ஈடுபட்டார். மீண்டும் சந்தசுவாமி 1959 இங்கி லாந்து சென்று 1961 இல் இலங்கைக்கு மீண்டும் வந் தார்.

யோகர் சுவாமி பசு முட்டி சிறு உபாதைக்கு உட்பட்ட போது சுவாமிபாவிப்பதற்கு இங்கிலாந்தில் இருந்து ஒரு சக்கர நாற்காலி கொண்டு வந்தார்.

சந்தசுவாமி ஒரு அரச குடும்பத்தில் பிறந்து தனது சற் குருவை தரிசித்து தீட்சை பெற்று யாழ்ப்பாணம் செங்கல லடி சிவதொண்டன்,கைதடி மார்க்கண்டு சுவாமி ஆச்சிர மம் போன்றவற்றில் வாழ க்கையை வாழ்ந்து 12.12.2004 கார்த்திகை மூலம் நாளில் இறையடி சேர்ந் தார். இவருடைய இறுதிக் கிரி கைகள் ஒலிங்டன் வின்கெல் டர் ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்றது.

இன்றுடன் சந்தசுவாமி யோகர் சுவாமியிடம் தீட்சை பெற்று 60 ஆண்டுகள் பூர்த் தியடைகின்றது. அத்துடன் யோகர் சுவாமியின் நற்சிந் தனை என்றும் நூல் வெளி யிடப்பட்டு 65 ஆண்டுகள் நிறைவடைகின்றது. நற்சிந் தனை என்னும் நல் அமு தத்தை எமது இளைய சந்த தியினருக்கு எடுத்துச் செல் வது எல்லோரினதும் தலை யாய கடமை.வீடுகள் ,கல்விக் கூடங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் தினந்தோ றும் நற்சிந்தனைப் பாடல்கள் படிக்கப்பட வேண்டும்.

இதன் மூலம் இச் சமூகம் ஒழுக்க முள்ள ஒரு பரம்பரை தோன்ற குருபரனின் திரு வருள் எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின றோம்.

க.சிவயோக ஈஸ்வரன் (BEM) U.K

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3001

### ரிஜிந்தன்




### விந்துயா




### யுவாரகா




### கரிஸ்




### பிரவீனா




### மாதுளன்





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 2
# பொன்னியின் செல்வன்
## காவியத் தொடர் 364





"சேனாதிபதி விக்கிரம கேசரிதான் கொடுத்தார். இதோ இந்தப் பழுவூர் பனை இலச்சினையையும் திருப்பிக் கொடுக்கச் சொன்னார். உனக்கு எப்போது இஷ்டமோ அப்போது பிரயாணம் புறப்படலாம் என்று சொன்னார்."

"வைஷ்ணவரே! தங்களுக்கு என் மனமார்ந்த நன்றி"

"நன்றியையெல்லாம் சேர்த்து வைத்துக்கொள். சமயம் வரும்போது கொடுக்கலாம்."

"ஐயா! இளவரசர் தற்சமயம் எங்கே இருக்கிறார் என்று தெரியுமா?"

"அது யாருக்கும் தெரியாது. அநுராதபுரத்திலிருந்து மலைநாட்டுக்குச் சென்றிருக்கிறார். தேடிக் கண்டுபிடித்தேயாக வேண்டும். உன்னோடு வழிகாட்டிப் போகும்படி சேனாதிபதி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். நீ விரும்பினால் வருகிறேன்."

வந்தியத்தேவனுக்கு மீண்டும் சிறிது சந்தேகம் உண்டாயிற்று.

"சுவாமிகளே! புறப்படுவதற்கு முன்பு சேனாதிபதியை நான் பார்க்கலாமா?" என்று கேட்டான்.

"அவசியம் பார்க்கலாம். பார்த்துவிட்டுத்தான் பிரயாணம் கிளம்ப வேண்டும். வானதி தேவியைப் பற்றிச் சேனாதிபதியிடம் தெரிவியாமல் போகலாமா!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

இதைக் கேட்ட வந்தியத்தேவன் இந்த வீர வைஷ்ணவனுக்கு உண்மையிலேயே மந்திர வித்தை கைவந்திருக்குமோ என்று வியப்படைந்தான்.

### இருபத்தேழாம் அத்தியாயம்
### காட்டுப் பாதை

கொடும்பாளூர்ப் பெரிய வேளராகிய சேனாதிபதி பூதி விக்கிரமகேசரி வயது முதிர்ந்த அனுபவசாலி. பல போர்க்களங்களில் பழந்தின்று கொட்டையும் போட்டவர். சோழ குலத்தாருடன் நெருங்கிய நட்பும் உறவும் பூண்டவர். அவருடைய சகோதரராகிய கொடும்பாளூர்ச் சிறிய வேளார் சில ஆண்டுகளுக்கு முன்னால் இலங்கைப் போர்க்களத்தில் வீர சொர்க்கம் அடைந்தார். அவருடன் சென்ற சைன்யமும் தோல்வியடைந்து திரும்ப நேர்ந்தது. அந்தப் பழியைத் துடைத்துக் கொடும்பாளூரின் வீரப் பிரதாபத்தை மீண்டும் நிலைநாட்டுவதில் அவர் பெரிதும் ஆத்திரம் கொண்டிருந்தார். ஆகையாலேயே சற்று வயதானவராயிருந்தும் இலங்கைப் படைக்குத் தலைமை வகித்து அங்கு வந்திருந்தார்.

இலங்கைப் போரை நன்கு நடத்த முடியாமல் பழுவேட்டரையர்களால் விளைந்த இடையூறுகளைப் பற்றி முன்னமே பார்த்தோமல்லவா? நெடுங்காலமாக அந்த இரண்டு சிற்றரசர் குலத்துக்கும் ஏற்பட்டிருந்த போட்டியும் பகைமையும் இதனால் இப்போது அதிகமாய் வளர்ந்திருந்தன. எனவே, பழுவூர் முத்திரையிட்ட இலச்சினையுடன் அகப்பட்டுக் கொண்ட வந்தியத்தேவன் பாடு சேனாதிபதி பெரிய வேளாரிடம் கஷ்டமாகத்தான் போயிருக்கும். அதிர்ஷ்டவசமாக அநிருத்தப் பிரமராயரிடம் இதைப் பற்றி அவர் பிரஸ்தாபிக்க நேர்ந்தது. வந்தியத்தேவனைப் பற்றிய உண்மையை ஆழ்வார்க்கடியானிடமிருந்து தெரிந்து கொண்ட அநிருத்தர் அவனையே சேனாதிபதி பூதிவிக்கிரம கேசரியிடம் சென்று உண்மையைத் தெரியப்படுத்தும்படி அவசரமாக அனுப்பி வைத்திருந்தார்.

வாணர் குலத்து வீரகுமாரனை மேலும் கீழும் உற்றுப் பார்த்த சேனாதிபதி பூதி விக்கிரம கேசரிக்கு அவனிடம் நல்ல அபிப்பிராயம் உண்டாகியிருக்க வேண்டும். அன்பான குரலில், "தம்பி! உன்னை இங்கே சரியாகக் கவனித்துக்கொண்டார்களா? தங்குவதற்கு இடம், உணவு எல்லாம் சரிவரக் கிடைத்ததா?" என்று கேட்டார்.

"ஆம் சேனாதிபதி! ஒரு குறைவும் இல்லாமல் பார்த்துக் கொண்டார்கள். கூறிய ஏவலைச் செய்வதற்கு வாசலில் ஐந்தாறு சேவகர்கள் எப்போதும் காத்திருந்தார்கள். தங்குவதற்கு இடம் தாராளமாய்க் கிடைத்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முத்திரை மோதிரத்தின் மகிமை

(நேற்றைய தொடர்ச்சி..)

அக்பருக்கு எப்படி ஒப்பனை செய்தால் சிறப்பாக இருக்கும் என்ற உத்திகள் பீர்பாலுக்கு நன்றாகத் தெரியும். அவற்றை அவர் அஷ்ரப்புக்குச் சொல்லிக் கொடுப்பார்.

ஒருநாள் மாலை அஷ்ரப் பீர்பாலைத் தேடி வந்தார். "இன்றிரவு அக்பர் மாறுவேடம் அணியப்போகிறார். அவருக்குப் பிச்சைக்காரர் வேடம் போட்டுவிடலாமா?" என்று பீர்பாலைக் கேட்டார்.

"தாராளமாகச் செய்! சக்ரவர்த்தியையை பிச்சைக்காரனாக்கும் சக்தி உனக்குத்தான் உண்டு" என்ற பீர்பால் தொடர்ந்து, "அவருக்கு ஒட்டுப் போட்ட சட்டையும், பைஜாமாவும் அணிவிப்பாய். பழைய, கிழிந்த துணியினால் தலைப்பாகை செய்! தேய்ந்து போன செருப்புகளைக் கொடு. முகத்திலும், கழுத்திலும், கைகளிலும் கறுப்பு வண்ணக் கோடுகள் போட்டு, சாயம்பூசி சுருங்கிய தோலும், வெயில் பட்டுக் கன்றிய முகமுமாக இருப்பதுபோல் செய்!" என்றார்.



அஷ்ரப் பீர்பால் கூறிய அனைத்தையும் கவனமாகக் கேட்டுக் கொண்டபின் அங்கிருந்து அகன்றார். "நான் நினைப்பது நடக்கும் என்று தோன்றுகிறது" என்று பீர்பால் புன்னகைத்தார். பிறகு தன் மனைவியை அழைத்துத் தனக்கும் பிச்சைக்காரன் வேடம் அணிவிக்க வேண்டினார்.

"இந்த நேரத்தில் உங்களுக்கு எதற்குப் பிச்சைக்காரன் வேடம்?" என்று அவள் கேட்டாள்.

"ஊர் முழுவதும் சுற்றி பிச்சை எடுக்கப் போகிறேன். அப்போது தான் பிச்சைக்காரர்களின் வாழ்க்கை எத்தனை கஷ்டமானது என்று உணர முடியும்" என்றார் பீர்பால்.

"நீங்களும், உங்கள் யோசனையும்!" என்று அவள் ஏளனமாகப் பேசினாலும், பீர்பாலுக்குப் பிச்சைக்காரன் வேடம் போட்டுவிட மும்முரமாக முயன்றாள். பழைய, ஒட்டுப்போட்ட துணிகளைத் தேர்ந்தெடுத்து அணிவித்தாள்.

பழைய, பிய்ந்து போன செருப்புகளை அணிவித்தபின் -, முகத்திலும், கழுத்திலும் சாயங்கள் பூசி அசல் பிச்சைக்காரனைப் போல் தோற்றமளிக்குமாறு செய்தாள். வேடம் நன்றாகப் பொருந்தி இருக்கிறது என்று திருப்தி அடைந்தபின் அவரை அனுப்பி வைத்தாள்.

வீட்டை விட்டுப் பிச்சைக்காரன் வேடத்தில் வெளியேறிய பீர்பால் நேராக அரண்மனையை நோக்கி நடந்தார். அரண்மனை வாயிலில் இருந்து ஒதுங்கி ஒரு மறைவான இடத்தில் நின்று கொண்டு காத்து இருந்தார். சிறிது நேரத்தில் அரண்மனை வாயிற் கதவுகள் திறக்க ஒரு பிச்சைக்காரன் வெளியே வந்தான். அவனை காவலர்கள் வணங்கினர்.

'பிச்சைக்காரன் உண்மையில் யார் என்று இவர்களேக் காட்டிக் கொடுத்துவிட்டனர்' என்று எண்ணிய பீர்பால் "ஏய், பிச்சைக்காரா? உன்னுடன் நானும் சேர்ந்து கொள்ளட்டுமா?" என்று கேட்டார். "யாரடா நீ?" என்று குரலில் அதிகாரம் தொனிக்க பிச்சைக்காரன் வேடத்திலிருந்த அக்பர் பீர்பாலைப் பார்த்துக் கேட்டார்.

"நானும் உன்னைப் போல் பிச்சைக்காரன் தான்" என்று பீர்பால் சொல்ல, "நான் பிச்சைக்காரன் இல்லை" என்று அக்பர் மறுத்தார்.

"பின்னே என்ன, நீ சக்ரவர்த்தியா?" என்று பீர்பால் வேண்டும் என்றே விஷமமாகக் கேட்க, "ஆம்! நான் அக்பர்! மாறுவேடத்தில் இருக்கிறேன்" என்றார் அக்பர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தில் பெரும்பாகத்தை பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். – லா புரூயர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குற்றத்தை கட்டுப்படுத்த வேண்டியவர்கள் குற்றவாளிகளாக இருக்கின்றனர்

சில மதத் தலைவர்கள் குற்றவாளிகளுடன் தொடர்பு வைத்துள்ளனர் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். அவர் கூறிய கருத்து முற்றிலும் உண்மை என்பது மறுக்க முடியாதது.

அந்த வகையில் சில மதத் தலைவர்கள் குற்றவாளிகளுடன் தொடர்பு வைத்துள்ளனர் என்பதைப் பகிரங்கமாகக் கூறிய அமைச்சர் டிரான் அலஸுக்குப் பாராட்டுத் தெரிவிக்கலாம்.

அதேநேரம் அமைச்சர் டிரான் கூறியதில் சிறு திருத்தம் செய்து, சில மதத் தலைவர்கள் குற்றவாளிகளாக உள்ளனர் என்றும் கூறமுடியும்.

தவிர, நாட்டின் மிகமோசமான குற்றவாளிகள் என்போர் சாதாரணமானவர்கள் அல்ல. அவர்கள் அரசியல்வாதிகளுடனும் பாதுகாப்பு துறையுடனும் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளனர்.

இந்த உண்மை அனைவருக்கும் தெரிந்ததாயினும் அதைத் துணிந்து கூறுவதற்கு எவரும் இல்லை என்பதுதான் உண்மை.

ஆம், இலங்கையில் இப்போது போதைவஸ்து வர்த்தகம் என்பது உச்சம் பெற்றுள்ளது.

சுருங்கக்கூறின் இலங்கையில் இப்போது நடைபெறுகின்ற சர்வதேச வர்த்தகம் என்பது போதைவஸ்தாக மட்டுமே இருக்கிறது.

அந்தளவுக்கு போதை வியாபாரிகள் அதல பாதாளம்வரை தங்களின் விஸ்வரூபத்தை எடுத்துள்ளனர்.

அவர்கள் போதை வர்த்தகத்தினூடாக உழைக்கின்ற பெரு இலாபம் அரசியல் முதல் பாதுகாப்பு வரையில் உள்ள குறிப்பிட்ட முக்கியஸ்தர்களுக்கும் பங்கிடப்படுகிறது.

ஆக, இலங்கையில் போதைவஸ்து வியாபாரத்தை ஒழிக்க வேண்டுமாயின், பாதுகாப்புத் துறையில் அதிலும் குறிப்பாக பொலிஸ் சேவையை ஊழலற்றதாக ஆக்க வேண்டும்.

இதைச் செய்யாதவரை போதைவஸ்து வியாபாரம் உள்ளிட்ட எந்தக் குற்றச்செயல்களையும் இல்லாதொழிக்க முடியாது.

உண்மையில் இலங்கையில் குற்றச் செயல்கள் தாண்டவமாடுவதற்கு மூலகாரணம் பொலிஸ் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் ஊழல் தலைவிரித்தாடுவதாகும்.

குறிப்பாக இலங்கையில் விபத்து மரணங்கள் அதிகரித்து வருகின்றன. அதிலும் வட மாகாணத்தில் விபத்து மரணம் சொல்லி மாளா.

இவ்வாறு நாள்தோறும் விபத்து மரணங்கள் நடக்கக் காரணம் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவில் இருக்கக்கூடிய இலஞ்சம் என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இதை நாம் கூறும்போது, போக்குவரத்துப் பொலிஸ் பிரிவில் நேர்மையான பொலிஸார் பணியாற்றுகின்றனராயினும் பெரும்பாலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்களுக்குக் கிடைத்த பொலிஸ் சேவையை அதன் தன்மையை உணராமல், தமது உத்தியோகத்தை இலஞ்சம் வாங்குவதற்காகவே பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் குற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டியவர்கள் குற்றவாளிகளாக இருப்பதுதான் மிகப் பெரிய அபத்தம்.

# யாழ். போதனாவில் மருத்துவ தவறுகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவ தவறுகள் காணப்பட்டால் அவற்றை தடுப்பதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், யாழ். போதனா வைத்திசாலையில் மருத்துவ தவறுகளால் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன என்பது தொடர்பில் எனக்கு அறிய தரப்பட்டது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பது மாத்திரமன்றி அவ்வாறான மருத்துவ தவறுகள் இனங்காணப்பட்டால் அவற்றை களைவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

அத்துடன், போதனா வைத்தியசாலையில் நிலவுவதாக கூறப்படும் மருந்து தட்டுப் பாட்டை நீக்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

அதேவேளை, யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி வருகை தரும்போது யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் நேரில் தெரிவித்து, அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க உள்ளேன்.

மேலும், யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதால் அதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை, சுகாதார சேவைகள் பணிமனை முன்னெடுத்து வருகின்றது.

இது தொடர்பில் சுகாதர சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரனுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுக்கக் கூறியதுடன், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கையும் எடுத்துள்ளோம்.

தொடர்ந்து, நுளம்புக்கு புகை அடிப்பது, டெங்கு பரவும் சூழல்களை இனங்கண்டு அவற்றை அழிப்பது போன்ற செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# மலையக தமிழர்களின் வளர்ச்சியை பிரித்தானியா பொறுப்பேற்க வேண்டும்

## மனோ கணேசன் எம்.பி வலியுறுத்து

மலையகத் தமிழர்களின் வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய, பிரித்தானிய அரசுகள் கூட்டுப் பொறுப்பேற்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

மலையக மக்கள் முன்னணி சார்பில் நுவரெலியாவில் நடைபெற்ற “200ல் மலையக மாற்றம்” விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது எதிர்கால வளர்ச்சிக்கு உதவிட வேண்டிய தார்மீக கடப்பாடு இன்று இந்திய, பிரித்தானிய அரசுகளுக்கு உண்டு.

அதை இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இங்கிலாந்து பிரதமர் ரீஷி சுனக் ஆகியோர் நிறைவேற்ற வேண்டும்.

கடந்த வாரம் நானும், இராதாகிருஷ்ணனும் இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் அன்ரூ பெட்ரிக்கை சந்தித்த போது, இதை நான் அவருக்குத் தெளிவாக எடுத்துக் கூறினேன்.

இன்றைய பிரிட்டிஷ் மன்னர் சார்ள்சின் அரசு எமக்கு உதவிட வேண்டும். இந்தியாவின் கடப்பாடு பற்றி நான் பலமுறை இந்திய தலைவர்களிடம் எடுத்துக் கூறியு ள்ளேன்.

அதேவேளை, இலங்கை யின் கடப்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஆகியோர் நிறைவேற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# கோப்பாய் பகுதியில் கசிப்பு உற்பத்தி

## பெண் உட்பட மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு காய்ச்சிய ஒரு பெண் உள்ளிட்ட மூவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயல்படும் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர்களிடம் இருந்து 44லீற்றர் கசிப்பும் 70 லீற்றர் கோடாவும் கைப்பற்றபட்டுள்ளன.

மேலும் ஆறு மதுபானப் போத்தல்களும் கசிப்பு காய்ச்சுவதற்கான உபகரணங்களும் கைப்பற்றபட்டன. மேலதிக விசாரணைக்காக சந்தேகநபர்கள் மூவரும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கபட்டனர். (ம-7,33)

# கொழும்பு – பதுளைக்கு இன்றுமுதல் இரண்டு விசேட ரயில்கள்

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளைக்கு இன்றுமுதல் இரண்டு விசேட ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று மற்றும் நாளை கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை வரை இரண்டு விசேட புகையிரதங்களை இயக்குவதற்கு புகையிரத திணைக்க்ளம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, இம்மாதம் 28 மற்றும் 31 ஆம் திகதிகளில் பதுளை புகையிரத நிலையத்தில் இருந்து கொழும்பு நோக்கி காலை 7.45 மணிக்கு இரண்டு விசேட புகையிரதங்களை இயக்குவதற்கு ரயில்வே திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது. (ம-7)

# மின்சாரம் தாக்கி காட்டு யானை பலி

மதவாச்சி - ஹீன்னகந்த வனப்பகுதியில் காட்டு யானையொன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளது.

சுமார் 20 வயது மதிக்கத்தக்க இந்த காட்டு யானை நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதியில் பயிர்ச் செய்கை காணியொன்றில் பொருத்தப்பட்டிருந்த மின்வேலியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த யானையின் மரணம் தொடர்பில் அநுராதபுரம் வனஜீவராசிகள் அலுவலகத்தினரும், மதவாச்சி பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை, மகாறம்பைகுளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதில் இவ்வளவு இருக்கிறதா? அறிந்ததும் அறியாததும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நாம் உணவாகஉண்ணும் பலவிதமான உணவுப் பதார்த்தங்களில் அவை மாவகையாயினும் தானிய வகையாயினும் கிழங்கு வகையாயினும் இலை வகையாயினும் இன்னும் மரக்கறிவகையாயினும் நல்லன என்பனவற்றை தெரிந்து உணவாக உட்கொண்டால் உடலுக்கும் தைரியமாக ஊட்டச்சத்தாக இருக்கும். இலகுவில் செரிமானமும் அடைந்துவிடும். அதிலும் அன்றாடம் உண்ணுகின்ற உணவுப் பொருட்களில் நாம் தெரிவு செய்து பல்வகைத் தன்மையை உள்ளடக்கியதாக உணவு அமைந்து விட்டால் எமது உடலுக்கு தேவையான ஊட்டச்சத்தை இலகுவில் பெற்றிடலாம்.

### மரவள்ளியும் வத்தாளையும்

கிழங்கு வகைகளுள் உள்ளடங்கும் மரவள்ளியும் வத்தாளையும் மாச்சத்தை கொண்டிருப்பவை. மரவள்ளியுடன் ஒப்பிடும் போது வத்தாளையிலுள்ள மாச்சத்து நீரிழிவு நோயாளர்களுக்கு பாதகம் குறைந்தது. அதிலுள்ள கிளைசீமிக் சுட்டி மரவள்ளியிலுள்ளதிலும் குறைவானதாகவே காணப்படுகின்றது.

வத்தாளையில் குறைந்தளவு கிளைசீமிக் சுட்டி காணப்படுவது இதற்குரிய விசேஷமாகும். மரவள்ளியிலும் பார்க்க வத்தாளை கிழங்கில் நீரிழிவு நோயாளர்கள் உட்கொள்ளக் கூடிய அளவு மட்டுப்படுத்தப்பட்ட மாச்சத்தும் அதிகளவில் நார்ச்சத்தும் உள்ளதனால் நீரிழிவுநோய் கண்டவர்கள் மரவள்ளியைத் தவிர்த்து வத்தாளையை உணவாக்கலாம்.

அத்துடன் வத்தாளையில் அதிகளவில் மக்னீசியமும் காணப்படுவதனால் இரண்டாவதுவகை (type II) நீரிழிவு நோயாளருக்கு சிறந்த உணவாக கருதப்படுகின்றது. வத்தாளை செய்கையில் பிரச்சினையாக இருப்பது அதில் பாதிப்பை ஏற்படுத்தும் நீள்மூஞ்சி வண்டு (Sweet potato weevil) மட்டுமே. இதனது சேதத்தை மட்டுப்படுத்தினால் அல்லது இல்லாதொழித்தால் வத்தாளையிலும் அதிகளவில் இலாபமீட்ட முடியும். வத்தாளை கிழங்கை அவித்து. சீவி பொரித்தும் உண்பார்கள். மரவள்ளிக் கிழங்கில் மாச்சத்து அதிகமாககாணப்படுவதனால் அதனைசுட்டு. வேகவைத்து. உண்பது போல வத்தாளையிலும் பல வகை தின்பண்டங்களை உருவாக்கலாம்.

### காரட்டும் பீற்றுட்டும்

காரட்டும் பீற்றுட்டும் உடல் வாகுவிற்கு ஏற்றவேர்த்தாவர உணவு வகைகள். இரண்டிலும் நார்ச்சத்து அதிகமாக காணப்படுவதனால் உணவுசெரிமானத்தினை இலகுவாக்கிவிடும். அத்துடன் உடலிலுள்ள நச்சுப் பதார்த்தங்களை அகற்றுவதற்கு கரட்டும் பீற்றுட்டும் பயன்படும். இரண்டிலும் பீற்றாகறும் கொழுப்பு என்பனவற்றின் அனுசேபத்திற்குஉதவுபவையாகும். இரண்டிலும் நோய் மற்றும் பீடைத்தாக்கம் மிகவும் குறைவானதாகவே காணப்படும். அதனால் நஞ்சற்ற உணவென பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

எமது உணவில் இவையிரண்டினையும் கணிசமானளவில் சேர்த்துக் கொள்வதுநல்லது. கரட் மற்றும் பீற்றூட் சாற்றினை காலை உணவருந்துவதற்கு முன்பதாக அருந்தினால் அதிலுள்ள ஊட்டச்சத்துக்கள்

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



ரோட்டின் காணப்படுவதனால் கண்பார்வைக்கு மிகவும் சிறந்தாக கருதப்படுகின்றது. உற்பத்தியில் பீற்றுட்டினை உற்பத்தி செய்வதற்கான செலவு அதிகமாகவும் எமது நாட்டின் தென்பகுதியில் அதிகளவில் விளைவிக்கப்பட்டு நாட்டின் பல பாகங்களுக்கும் விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்டாலும் வடமாகாணத்திலும் காரட் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனால் மலையகத்தில் உற்பத்தியாகும் காரட்டின் மென்மைத் தன்மையும் இனிப்புத் தன்மையும் வடபகுதியில் உற்பத்தி செய்யப்படுவதற்கு இருப்பதில்லை. இரண்டிலும் குறைவான கொழுப்பும் அதிகமான உணவு நார்த்தன்மையும் காணப்படுகின்றது.

பீற்றுட் எமதுபிரதேசத்தில் இலகுவில் பயிரிடக்கூடியதும் விலைமலிவாக கிடைக்கக் கூடியதுமான பயிர். இதில் மேலதிகமாகவிற்றமின் சீயும் பீ6ம் காணப்படுகின்றன. மேலும் பீற்றுட் இல் காணப்படும் பொட்டாசியம் உடலின் நீர்ச் சமனிலையை பேணவும் நைதரேற்று உடலில் நிலையை குறைக்கவும் உதவும்.

இவை காபோவைதரேற்று மற் மற்றும் நோயெதிர்ப்புசக்தியை பேணிக்காக்கும் அன்ரிஒட்சிடன்கள் இலகுவில் எமதுஉடலினால் அகத்துறிஞ்சப்பட ஏதுவாகும். அத்துடன் எமது உடலினது தோலின் வளர்ச்சிக்கு இரண்டும் அவசியம் தேவையானதுமாகும். விலைமலிவாக எது கிடைக்கின்றதோ அதனை உணவில் சேர்த்துக்கொள்வன் மூலம் இயற்கையாக பீற்றா கரோட்டினை உடலுக்கு கொடுக்கும் வழியிருக்கின்றதல்லவா. மேலும் பார்வைக் கோளாறுவராமலும் பார்த்துக் கொள்ளலாம்.

### மஞ்சள் பருப்பும் துவரைப்பருப்பும்

மஞ்சள் பருப்பும் துவரம் பருப்பும் அவரையினத்தை சார்ந்தவையாதலால் இரண்டிலும் புரதச்சத்து அதிகமாக காணப்படும். இருந்தாலும் துவரம் பருப்பில் கணிசமானளவு புரதச்சத்து.நார்ச்சத்து அத்துடன் அதிகளவில் அன்ரி ஒட்சிசன்களும் காணப்படுகின்றன. இரண்டு பருப்புக்களையும் புரதச்சத்துக்கு மாற்றீடாக பயன்படுத்துலாம். ஆனால் ஊட்டச்சத்தும் சுவையும் துவரைப் பருப்பில் அதிகம்ஆனாலும் எதுவென்றாலும் அதிகமாக உட்கொண்டால் அமிர்தமும் நஞ்சு.

அந்தநிலைமை இங்கும் காணப்படுகின்றது. அளந்தறிந்துண் என்பார்கள் அதுபோலஅவரைகள் என்பதனால் அளவுக்கு மீறி உணவாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

### கம்பும் குரக்கனும்

கம்புப்பயிரும் குரக்கனும் தானியப் பயிர்கள். இரண்டிலும் மாச்சத்துஅதிகமாக இருப்பினும் கம்புப் பயிரில் கூழ் காய்ச்சிவிவசாயப் பெருமக்கள் விரும்பியுண்பர். அதிலுள்ள ஊட்டச்சத்து எதிலும் வாராதென்பர். கம்பு எந்த உள்ளீடுகளும் இல்லாது பயிர் செய்கைப்படும் வரண்ட பிரதேசத்து பயிராகும். குரக்கனுக்கும் அதே நிலைமைதான். ஆனால் குரக்கனிலுள்ள ஊட்டச் சத்து வித்தியாசமானது. இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில் குரக்கன் களிமிகவும் பிரபல்யமானது. இரண்டுமே வறுமைப்பட்டவர்களின் உணவு என விளிப்பார்கள். கம்பும் குரக்கனும் இருந்தால் பஞ்சமேது என்பது முன்னோர்கள் கூறிவைத்தது. எமது பிரதேசத்தில் கம்பும் குரக்கனும் அதிகளவில் பயிரிட்டு எமது பிரதேசத்து வறுமையை விட்டொழிப்போம்.

### ஜம்புவும் விளிம்பியும்

நீரிழிவு நோயாளர்கள் விரும்பியுண்ணும் பழமாக ஜம்புவினையும் விளிம்பியையும் குறிப்பிடலாம். முழுக்கமுழுக்க நீர்ச்சத்தினைக் கொண்டிருந்தாலும் இதில் சீனிச் சத்துமிகவும் குறைவு அத்துடன் இருக்கின்ற கலோரிப் பெறுமானமும் குறைவாகும். இவ்வகைப் பழங்களைவீட்டுத்தோட்டத்தில் சிறப்பாக வளர்த்து எமக்கு உணவாககொள்ளலாம். நாமாக உற்பத்தி செய்து அறுவடையும் செய்து உணவாகபயன்படுத்தக் கூடிய இவ்வகைப் பழங்களைநாம் அரிதாகவே எமதுஉணவில் சேர்த்துக் கொள்ளவதுண்டு. பல்வகைகளுமுடைய பழங்களில் ஜம்புவும் விளிம்பியும் மிக முக்கியமான பழப் பயிர்களாகும். நாமே உற்பத்தி செய்து உணவாக்க பழகிக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு - கிழக்...

கடல் பிராந்தியத்தில் ஒரு காற்று சுழற்சியுமாக நில நடுக்கோட்டு இந்திய பெருங்கடல் பகுதியில் வெவ்வேறான காற்று சுழற்சிகள் உருவாகியுள்ளன.

குறித்த இரண்டு காற்று சுழற்சிகளும் தற்போது ஒன்றாக இணைந்து சற்று வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன.

இதன் காரணமாக இன்றுள்ள வானிலை அமைப்பின்படி வட மாகாணத்தில் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## களுத்துறையில்...

மதிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உயிரிழந்த கைதி கரவிட்ட, மொல்காவ பிரதேசத்தைச் சேர்ந்த பி.ஜி. சுனில் என்ற 46 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கைதி சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் இரு நாட்களுக்கு முன்னர் களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

எனினும், உயிரிழந்த கைதி மீது தாக்குதல் நடத்தியவர்கள் சிறைக் காவலர்களா? அல்லது சக கைதிகளா? என்ற தகவலைப் பொலிஸார் இன்னமும் வெளியிடவில்லை. (ம-7)

## தரமற்ற...

ரம்புக்வெலவுக்காக சட்டத்தரணிகள் குழுவொன்றும் ஆஜராகியிருந்தது.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமை தொடர்பில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த, மேற்படி அமைச்சின் மருத்துவ வழங்கல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் டாக்டர் கபில விக்ரமநாயக்க மற்றும் சிலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.(ம-7)

## ஜனாதிபதித்...

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலையில் 2024 ஆம் ஆண்டு எந்த தேர்தல் எப்போது நடக்கும் என்பது தொடர்பில் யாருக்கும் தெரியாது.

முதலில் பாராளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்பு இல்லை.

ஏனென்றால் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்று அதில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் தற்போதைய ஜனாதிபதியை தொடர்ந்து பதவியில் இருக்க அனுமதிக்க மாட்டார்கள்.

இதனால், ஜனாதிபதித் தேர்தல் தான் முதலில் நடக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது. அப்படி நடந்தால் கூட நான்கு பிரதான கட்சிகளிலும் முக்கியமானவர்கள் வேட்பாளர்களாக களமிறங்கக்கூடும்.

அவ்வாறு களமிறங்கினால் தனி ஒருவரினால் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்கினைப் பெற்றுக்கொள்ள முடியாது போய்விடும்

அவ்வாறு இருக்கும்போது ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வருவாரா என்ற கேள்வி எழுகின்றது.

ரணில் ஜனாதிபதியாக வரவேண்டுமாக இருந்தால் மொட்டுக் கட்சியின் ஆதரவு தேவையெனவும் தெரிவித்தார். (ம-7)

## நாட்டில் டெங்கு...

காணப்பட்டுள்ளதுடன், அந்த மாகாணத்தில் மொத்தமாக 38,986 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 12 ஆயிரத்தால் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் 72,903 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்த நிலையில், இந்த வருடத்தில் இதுவரை 85,636 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதேவேளை, இந்த ஆண்டில் இதுவரை 50 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளதோடு கடந்த ஒரு வாரத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும், அதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் திடீரென அதிகரித்துள்ளது.

மேலும், இந்த வருடம் உலகளவில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## வடக்குக்...

யாழில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வனவள பாதுகாப்பு, வன ஜீவராசி திணைக்களம் என்பவற்றின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள காணி விடுவிப்பு தொடர்பில் 11 கட்டம் இருந்தது. அதில் 4 கட்டமே பூர்த்தியாகியுள்ளது.

ஏனைய கட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அவைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் 100 வீதம் சரிவரும் என்ற நம்பிக்கை உண்டு.

உயர் பாதுகாப்பு வலயமாக படைத் தரப்புக்களின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிக்க தொடர்ந்து முயற்சிக்கிறேன். முடிந்த வரையில் காணி விடுவிக்க நடவடிக்கைகளை எடுப்பேன்.

ஜனாதிபதி யாழ்ப்பாணம் வரும் வேளையில் காணிகள் விடுவிக்கப்படும் அல்லது அது தொடர்பில் சாதகமான முடிவுகள் எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஏன் கலந்து கொள்ளவில்லை என அமைச்சரிடம் கேட்டபோது.

வடக்கில் எம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகள் நிறைய இருந்தமையால் நான் வடக்கில் தங்கி இருந்தேன். அதனால் சந்திப்புக்கு செல்ல வில்லை. ஜனாதிபதியுடன் மக்களுக்காக தொலைபேசியில் கதைக்கக்கூடிய நிலையில் உள்ளேன். பல்வேறு தடவைகள் கதைத்தும் உள்ளேன்.

என் கட்சி சார்பில், கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் கலந்து கொண்டார் என பதில் அளித்தார். (ம-7,33)

## தையிட்டியில்...

டாவது நாளாக நேற்று செவ்வாய்க்கிழமை போராட்டம் நடைபெற்றது.

இந்த போராட் டத்தில் அபகரிக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2023.12.26
சீட்டிழுப்பு இலக்கம் 0166
N 9 1 6 0 1 5 N

தன நிதானய
திகதி 2023.12.26
சீட்டிழுப்பு இலக்கம் 1370
M 01 03 09 20 M
Double Chance 04875

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3582
சீட்டிழுப்பு திகதி 26.12.2023
N 52 55 58 68
N 44158

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.26
சீட்டிழுப்பு இலக்கம் 0649
துலாம் 20 23 27 53 துலாம்
44378 08

மஹஜன சம்பத
திகதி 2023/12/26
சீட்டிழுப்பு இலக்கம் 5340
0 6 4 6 9 5 4

மெகா பவர்
திகதி 26/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1688
F 23 08 29 53 66
49998

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.12.2023 வெற்றி வாரம் 048 வர்ணம் சிவப்பு
V 3 2 6 1 6 0
47938
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 24,843,227.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2314 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.26 தினம் செவ்வாய்க்கிழமை
09 36 59 70 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,452,418.40
66303

சனிதா
திகதி 2023.12.26 வெற்றி வாரம் 4475 வர்ணம் பச்சை
37 41 50 54 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,003,398.40
33004

சசிரி
வெற்றி வாரம் 420
சீட்டிழுப்பு திகதி 2023.12.26
04 34 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,417,240/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4026 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.12.26 தினம் செவ்வாய்க்கிழமை
05 07 32 46 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,261,520/-
243453

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 36 01 30 36 39
சீட்டிழுப்பு வாரம் 1490
2023.12.26 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 482,337,954.20

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 2140
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,814,520/-
ADA KOTIPATHI
01 30 53 59 D
773604

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L 2024/ 2025
இணைந்த கணிதம்
தனி வகுப்புக்கள் (Personal class)
யாழ்ப்பாணத்தில்
S.Thanushan
BSc(Hons) in statistics Peradeniya (UOP)
076 384 8597
070 415 4816
(18385)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18329)
076 825 7716 (ஆகாஸ்)



கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை
மானிப்பாய்
வேலை வாய்ப்பு
வரவேற்பாளர் (Receptionist)
தகைமைகள்
* முன் அனுபவம் விரும்பத்தக்கது
* சம்பளம் நேர்காணலின் போது தீர்மானிக்கப்படும்
உங்களுடைய CV ஐ surgerygmh@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்
Green Memorial Hospital, Manipay ☎ 0212255157 0770661031
(C-8024)



காணி விற்பனைக்கு
இராசபாதை, கிருஷ்ணர் கோவிலுக்கு அருகாமையில் வாழைத்தோட்டத்துடன் கூடிய 15 அடி பாதையுடன் 7 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.
காணிகள், வீடுகள்,
வியாபார நிலையங்கள்
விற்பதற்கும் வாங்குவதற்கும்
நாடவேண்டிய
நம்பிக்கையான இடம்
Easy Real Estate
075 710 9639 | 071 964 6619
(18373)


# 15 வயது சிறுவன் நீரில் மூழ்கி பலி

(கொழும்பு)

நாவலப்பிட்டி கல்பொட நீர்வீழ்ச்சியில் நண்பர்கள் குழுவுடன் குளித்துக் கொண்டிருந்த 15 வயதுடைய பாடசாலை மாணவன் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நண்பர்கள் குழுவுடன் புகையிரதத்தில் கல்பொடவுக்கு வந்த கடுகன்னாவ, பானபொக்கவைச் சேர்ந்த 15 வயதுடைய பசிந்து சமோத் என்பவரே கல்பொட நீர்வீழ்ச்சியில் குளித்துக் கொண்டிருந்த போது இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளார்.

குறித்த மாணவன் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார். (ம-7)

# தானியங்கள் விலை மீண்டும் அதிகரிப்பு

சந்தையில் தானியங்களின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

அதன்படி, எள்ளு, பாசிப்பயறு, கௌப்பி, உளுந்து போன்ற தானியங்களின் தேவைக்கேற்ப போதுமான கேள்வி கிடைக்காததால் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கிலோ எள்ளின் விலை 950 ரூபாவாகவும், ஒரு கிலோ கௌப்பி 800 ரூபாவாகவும் உயர்ந்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், பாசிப்பயறு கிலோ 700 முதல் 750 வரை விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## களுத்துறையில் கடலில் மூழ்கிய

# இளம் பொலிஸ் உத்தியோகத்தர் பலி

(களுத்துறை)

களுத்துறை, கட்டுகுருந்தே பகுதியில் உள்ள விடுதி ஒன்றிற்கு பின்புறம் உள்ள கடலில் இரண்டு நண்பர்களுடன் நீராடச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் கடலில் மூழ்கிக் கொண்டிருந்த போது அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் கடமையாற்றிய தொடம்கொட வெனிவெல்கெட்டியவத்தையை சேர்ந்த ஒலுகம பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய தேஷாஞ்ச தரேந்திரா என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# புதையல் தோண்டிய 10 பேர் பொலிஸாரால் கைது

வாழைச்சேனை - கல்லிச்சியா பளை காப்புக்காட்டில் புதையல் தோண்டிய 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அங்கு அகழ்வாராய்ச்சிக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் விசேட அதிரடிப்படையினர் கையகப்படுத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தம்புத்தேகம, அனுராதபுரம், பராக்கிரம சமுத்திர, முருதலாவ, பொலன்னறுவை மற்றும் வெலிகந்த ஆகிய பிரதேசங்களை வசிப்பிடமாக கொண்ட 20 மற்றும் 64 வயதுடையவர்களாவர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் உபகரணங்களும் தற்போது வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-7)


Canada and Italy Visa
(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
பணியாளர் தேவை
VISA CONSULTANT
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
077 038 5584
(18358)



வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (18357)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127



சிறிராம் ஜுவல்லர்ஸ்
இல. 158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி.

♦ செய்கூலி, சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
♦ அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்
♦ அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
♦ தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலைவரத்தின் படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.
(C-8025)
077 165 1729, 077 773 0567,
021 222 8334



காணி விற்பனைக்கு
கோண்டாவில் நந்தாவில் அம்மன் கோவில் பின்புறமாக 3 3/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
இராசபாதை றோட்டுக் கரையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(18346)
077 882 8638



மணமகள் தேவை
1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
Viber or Whatsapp
0044 7578 626565,
077 251 9150
Email add: rajasasikumar@gmail.com
(18318)



VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
Srilankan Visa Extension
இலங்கை விசா நீடிப்பு தரப்படும்
(C-8027)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777



CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-8027)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS



விற்பனைக்கு
உற்பத்தி வருடம் 2014 ஆம் ஆண்டு, Mahindra maxximo வடி வகை வாகனம் விற்பனைக்கு உண்டு.
(முழு அலுமினிய Body உடன்)
(18375)
077 886 9583



வாடகைக்கு வீடு தேவை
கொக்குவில், கோண்டாவில், தாவடி, நல்லூர் பகுதிகளில் வாடகைக்கு வீடு தேவை.
(18377)
076 790 2678
077 110 8451


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தினரால் ... அவர்களது அச்சகத்தில் 27.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org